இனிமையான குழந்தைகளே! நீங்கள் அரைகல்பமாக யாரை பக்தி செய்தீர்களோ அதே தந்தை சுயம் உங்களுக்கு கற்பித்துக் கொண்டிருக்கிறார். இந்த கல்வியின் (படிப்பின்) மூலமாகவே நீங்கள் தேவி தேவதை ஆகிறீர்கள்.

கேள்வி: யோகம் என்ற -ஃப்டின் அற்புதம் என்ன?

பதில்: குழந்தைகளாகிய நீங்கள் யோக பலத்தின் லிஃப்ட் மூலமாக ஒரு நொடியில் மேலே ஏறி விடுகிறீர்கள். அதாவது ஒரு நொடியில் ஜீவன் முக்தியின் ஆஸ்தி உங்களுக்குக் கிடைத்துவிடுகிறது. ஏணிப்படி இறங்குவதில் 5 ஆயிரம் வருடங்கள் பிடித்தன. மேலும் ஒரு நொடியில் ஏறி விடுகிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். இது தான் யோக பலத்தின் அற்புதம் ஆகும். தந்தையின் நினைவினால் எல்லா பாவங்களும் நீங்கி விடுகின்றன. ஆத்மா சதோபிரதானமாக ஆகிவிடுகிறது.

ஓம் சாந்தி. ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு வந்துப் புரிய வைக்கிறார். ஆன்மீகத் தந்தையின் மகிமையோ குழந்தைகளுக்கு கூறியிருக்கிறார். அவர் ஞானக் கடல் சத்-சித்-ஆனந்த சொரூபம் ஆவார். அமைதியின் கடல் ஆவார். அவருக்கு எல்லாமே எல்லைக்கப்பாற்பட்ட பட்டங்கள் அளிக்கப்படுகின்றன. இப்பொழுது தந்தை ஞானக்கடல் ஆவார். மேலும் இச்சமயம் இருக்கும் மனிதர்கள் அனைவருமே நாங்கள் பக்தியின் கடல் ஆவோம் என்பதை அறிந்துள்ளார்கள். பக்தியில் யார் எல்லோரையும் விட தீவிரமாக இருக்கிறாரோ அவருக்கே மதிப்பு கிடைக்கிறது. இச்சமயம் கலியுகத்தில் இருப்பது பக்தி, துக்கம். சத்யுகத்தில் இருப்பது ஞானத்தின் சுகம். அப்படியின்றி அங்கு ஞானம் இருக்கிறது என்பதல்ல. எனவே இந்த மகிமை ஒரே ஒரு தந்தையினுடையதாகும். மேலும் குழந்தைகளின் மகிமையும் இருக்கிறது. ஏனெனில் தந்தை குழந்தைகளுக்குக் கற்பிக்கிறார் அல்லது யாத்திரை கற்பிக்கிறார். இரண்டு யாத்திரைகள் உள்ளன என்று தந்தை புரிய வைத்துள்ளார். பக்த ஜனங்கள் தீர்த்த யாத்திரை செய்கிறார்கள். நாலா புறங்களிலும் சுற்றி வருகிறார்கள். ஆக எவ்வளவு காலம் நாலா புறங்களிலும் சுற்றி வருகிறார்களோ அவ்வளவு காலம் விகாரத்தில் செல்வதில்லை. சாராயம் போன்ற சீ-சீ பொருட்கள் எதையும் உட்கொள்ளவோ, அருந்தவோ மாட்டார்கள். சிலசமயம் பத்ரிநாத், சிலசமயம் காசி என்று சுற்றி வருவார்கள். பகவானிடம் பக்தி செய்கிறார்கள். இப்பொழுது பகவானோ ஒருவராகத் தான் இருக்க வேண்டும் அல்லவா? எல்லா புறங்களிலும் சென்று சுற்றி வரவேண்டியதில்லை அல்லவா? சிவபாபாவினுடைய தீர்த்தங்களில் சுற்றி வருகிறார்கள். எல்லாவற்றையும் விட பெரியது பனாரஸ் தீர்த்தம் என்று பாடப்பட்டுள்ளது. அதற்கு சிவனின் புரி (நகரம்) என்று கூறுகிறார்கள். நாலா புறங்களிலும் செல்கிறார்கள். ஆனால் யாருடைய தரிசனம் செய்ய செல்கிறார்களோ அல்லது யாரை பக்தி செய்கிறார் களோ அவருடைய வாழ்க்கை சரித்திரம், தொழில் பற்றி யாருக்குமே தெரியாது. எனவே அதற்கு குருட்டு நம்பிக்கை என்று கூறப்படுகிறது. ஒருவருக்கு பூஜை செய்வது, தலை வணங்குவது மற்றும் அவரது வாழ்க்கைச் சரித்திரத்தை அறியாமலிருப்பது - இதற்கு குருட்டு

நம்பிக்கை என்பார்கள். வீட்டில் கூட கொண்டாடுகிறார்கள். தேவிகளுக்கு எவ்வளவு பூஜை செய்கிறார்கள். மண்ணினால் அல்லது கல்லினால் தேவிகளை அமைத்து அவற்றை மிகவுமே அலங்கரிக்கிறார்கள். உதாரணமாக லட்சுமியின் படத்தை அமைக்கிறார்கள். அவர்களிடம் இவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தைக் கூறுங்கள் என்றால் அவர் சத்யுகத்தின் மகாராணியாக இருந்தார் என்பார்கள். திரேதாவில் பிறகு சீதை இருந்தார். மற்றபடி இவர்கள் எவ்வளவு காலம் ஆட்சி புரிந்தார்கள். லட்சுமி நாராயணரின் ஆட்சி எப்பொழுதிலிருந்து எப்பொழுது வரை நடந்தது என்பது யாருக்குமே தெரியாது. மனிதர்கள் பக்தி மார்க்கத்தில் யாத்திரை செல்கிறார்கள். இவை எல்லாமே பகவானை சந்திப்பதற்கான வழிகளாகும். சாஸ்திரங்கள் படிப்பது இதுவும் பகவானை சந்திப்பதற்கான வழி ஆகும். ஆனால் பகவான் எங்கே இருக்கிறார் என்றால், அவரோ சர்வவியாபி (எங்கும் நிறைந்தவர்) என்பார்கள்.

ஆன்மிகக் கல்வியின் மூலம் நாம் இவர்கள் போல (தேவி தேவதை) ஆகிறோம் என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்துள்ளீர்கள். யாரை சந்திப்பதற்காக அரை கல்பம் பக்தி மார்க்கம் நடக்கிறதோ அதே தந்தை சுயம் வந்து கற்பிக்கிறார். பாபா! பாவனமாக ஆக்குங்கள். மேலும் நீங்கள் யார் என்று உங்கள் அறிமுகத்தையும் கொடுங்கள்! என்று கூறுகிறார்கள். ஆத்மாவாகிய நீங்கள் புள்ளி ஆவீர்கள் என்று பாபா புரிய வைத்துள்ளார். ஆத்மாவிற்குத் தான் இங்கு சரீரம் கிடைத்துள்ளது. எனவே இங்கே கர்மம் செய்கிறது. தேவதைகளுக்கு அவர்கள் சத்யுகத்தில் ஆட்சி புரிந்து சென்றுள்ளார்கள் என்று கூறுவார்கள். கிறிஸ்தவர்களோ காட்ஃபாதர் உண்மையில் பேரடைஸ் (சொர்க்கத்தை) ஸ்தாபனை செய்தார் என்று புரிந்துள்ளார்கள். நாங்கள் அங்கு இருக்கவில்லை. பாரதத்தில் பேரடைஸ் இருந்தது. அவர்களுடைய புத்தியாவது நன்றாக உள்ளது. பாரதவாசிகள் சதோபிரதானமாகவும் ஆகிறார்கள். பிறகு தமோபிரதானமாகவும் ஆகிறார்கள். அவர்கள் இவ்வளவு சுகத்தைப் பார்ப்பதில்லை. பின் துக்கத்தைக் கூட இந்த அளவு பார்ப்பதில்லை. இப்பொழுது பின்னால் இருக்கும் கிறிஸ்தவர்கள் எவ்வளவு சுகமாக இருக்கிறார்கள். முதலிலோ அவர்கள் ஏழைகளாக இருந்தார்கள். பணம் உழைப்பு மூலமாக சம்பாதிக்கப்படுகிறது அல்லவா? முதலில் ஒரு கிறிஸ்து வந்தார். பிறகு அவரது தர்ம ஸ்தாபனை ஆகிறது. விருத்தி ஆகிக் கொண்டே போகிறது. ஒன்றிலிருந்து இரண்டு, இரண்டிலிருந்து நான்கு...... பிறகு இவ்வாறே விருத்தி ஆகிக் கொண்டே போகிறது. இப்பொழுது பாருங்கள் கிறிஸ்துவர்களினுடைய விருட்சம் எவ்வளவு ஆகிவிட்டுள்ளது. அஸ்திவாரம் தேவி தேவதா குடும்பம் ஆகும். அது மீண்டும் இங்கு இச்சமயம் ஸ்தாபனை ஆகிறது. முதலில் ஒரு பிரம்மா பிறகு பிராமணர்களின் தத்து எடுக்கப்பட்ட குழந்தைகள் விருத்தி அடைகிறார்கள். தந்தை கற்பிக்கிறார். அப்பொழுது மிகவுமே ஏராளமான பிராமணர்கள் ஆகிவிடுகிறார்கள். முதலிலோ இந்த ஒருவர் இருந்தார் அல்லவா? ஒன்றிலிருந்து எவ்வளவு விருத்தி ஆகிவிட்டுள்ளது. எவ்வளவு ஆக வேண்டி உள்ளது. எத்தனை பேர் சூரிய வம்சம் சந்திர வம்சத்தில் தேவதைகளாக இருந்தார்களோ அத்தனை பேர் ஆகவே வேண்டியுள்ளது. முதலில் இருப்பவர் ஒரு தந்தை. அவருடைய ஆத்மா இருக்கவே இருக்கிறது. தந்தையின் குழந்தைகளாகிய நாம் ஆத்மாக்கள் எத்தனை பேர் இருக்கிறோம்? ஆத்மாக் களாகிய நம் அனைவரின் தந்தை ஒருவர் அனாதி ஆவார். பிறகு சிருஷ்டி சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. எல்லா மனிதர்களும் எப்பொழுதுமே

இருக்கமாட்டார்கள் அல்லவா? ஆத்மாக்கள் பல்வேறு பாகத்தை ஏற்று நடிக்க வேண்யுள்ளது. இந்த விருட்சத்தின் முதன்முதல் வேர் தேவி தேவதைகளினுடையதாகும். பிறகு அவற்றிலிருந்து தண்டுகள் வெளிப்பட்டுள்ளன. எனவே குழந்தைகளே நான் வந்து என்ன செய்கிறேன் என்பதை தந்தையே வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். ஆத்மாவில் தான் தாரணை ஆகிறது. நான் எப்படி வந்தேன் என்பதை தந்தை வந்து கூறுகிறார். குழந்தைகளாகிய நீங்கள் அனைவருமே பதீதமாக (தூய்மை அற்றவராக) ஆகிவிடும் பொழுது நினைவு செய்கிறீர்கள். சத்யுக திரேதாவிலோ நீங்கள் சுகமாக இருக்கும்பொழுது நினைவு செய்யாமல் இருந்தீர்கள். துவாபரத்திற்கு பிறகு துக்கம் அதிகமாக ஆகும் பொழுது ஹே, பரமபிதா! பரமாத்மா! பாபா என்று கூப்பிட்டீர்கள். ஆம், குழந்தைகளே! கேட்டேன். என்ன விரும்புகிறீர்கள்! பாபா வந்து பதீதர்களை பாவனமாக ஆக்குங்கள். பாபா நாங்கள் மிகவும் துக்கமுடையவர்களாக பதீதமாக உள்ளோம். நீங்கள் வந்து எங்களை பாவனமாக ஆக்குங்கள். கிருபை புரியுங்கள். ஆசீர்வாதம் செய்யுங்கள்! பாபா வந்து பதீதர்களை பாவனமாக ஆக்குங்கள் என்று நீங்கள் என்னை அழைத்தீர்கள். பாவனம் என்று சத்யுகத்திற்குக் கூறப்படுகிறது. இதுவும் சுயம் தந்தை வந்து கூறுகிறார். நாடகத் திட்டப்படி சங்கமயுகம் ஆகும்பொழுது சிருஷ்டி பழையதாகிவிடும் பொழுது நான் வருகிறேன்.

சந்நியாசிகள் கூட இரண்டு விதமாக உள்ளார்கள் என்பதை நீங்கள் புரிந்துள்ளீர்கள். அவர்கள் ஹடயோகி ஆவார்கள். அவர்கள் இராஜயோகி என்று கூறப்படுவதில்லை. அவர்களுடையது எல்லைக்குட்பட்ட சந்நியாசம் ஆகும். வீடு வாசல் விட்டு போய் காட்டில் இருக்கிறார்கள். குருமார்களுக்கு சீடர்கள் ஆகிறார்கள். கோபிசந்த் இராஜாவுக்கும் கூட ஒரு கதை கூறுகிறார்கள். நீங்கள் ஏன் வீடு வாசல் விடுகிறீர்கள்? எங்கு செல்கிறீர்கள்? சாஸ்திரங்களில் நிறைய கதைகள் உள்ளன. இப்பொழுது பி.கே.க்களாகிய நீங்கள் இராஜாக்களுக்கும் போய் ஞானம் மற்றும் யோகம் கற்பிக்கிறீர்கள். ஒரு அஷ்டாவக்கிர கதையும் உள்ளது. அதில் காண்பிக்கிறார்கள் - இராஜாவிற்கு வைராக்கியம் ஏற்பட்டது. யாராவது என்னை பரமாத்மாவை சந்திக்குமாறு செய்யுங்கள் என்று கூறினார். தண்டோரா அடிக்குமாறு செய்வித்தார். இது அதே நேரமாகும். தந்தையைச் சந்திக்குமாறு செய்விப்பதற்கு நீங்கள் போய் இராஜாக்களுக்கு ஞானம் அளிக்கிறீர்கள் அல்லவா? எப்படி நீங்கள் சந்தித்துள்ளீர்களோ அதே போல மற்றவர்களையும் சந்திக்க வைக்கும் முயற்சி செய்கிறீர்கள். நாங்கள் உங்களை சொர்க்கத்திற்கு அதிபதி ஆக்கிவிடுவோம், முக்தி ஜீவன் முக்தி அளிப்போம் என்று நீங்கள் கூறுகிறீர்கள். பிறகு அவர்களுக்குக் கூறுங்கள், சிவபாபாவை நினைவு செய்யுங்கள், வேறு யாரையுமே அல்ல. உங்களிடம் கூட ஆரம்பத்தில் உட்கார்ந்தபடியே ஒருவரையொருவர் பார்த்து தியானத்தில் சென்றுவிடுவார்கள் அல்லவா? மிகவுமே ஆச்சரியமாக இருந்தது. இவருக்குள் தந்தை இருந்தார் அல்லவா? எனவே அவர் அதிசயம் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். எல்லோருடைய கயிற்றையும் (புத்தி) இழுத்து விட்டுக் கொண்டிருந்தார். பாப்தாதா இருவரும் சேர்ந்திருந்தார்கள் அல்லவா? சுடுகாடு அமைப்பார்கள். எல்லோரும் தந்தையின் நினைவில் உறங்கிவிடுங்கள். எல்லோரும் தியானத்தில் சென்று விடுவார்கள். இவை எல்லாமே சிவபாபாவின் சாமர்த்தியமாக இருந்தது. இதை பிறகு நிறைய பேர் மாயா ஜாலம் என்று நினைக்க முற்பட்டார்கள். இது சிவபாபாவின் விளையாட்டாக

இருந்தது. தந்தை மந்திரவாதி, வியாபாரி, ரத்தினங்களை அளிப்பவர் ஆவார் அல்லவா? வண்ணானும் ஆவார், தட்டானும் ஆவார், வழக்கறிஞரும் ஆவார். அனைவரையும் இராவணனின் சிறையிலிருந்து விடுவிக்கிறார். அவரைத் தான் ஹே பதீத பாவனரே, ஹே தூரதேசத்தில் இருப்பவரே.. .. .. வந்து எங்களை பாவனமாக்குங்கள் என்று எல்லோரும் அழைக்கிறார்கள். அதுவும் பதீத உலகத்தில் பதீத (தூய்மையற்ற) சரீரத்தில் வந்து எங்களை தூய்மையாக ஆக்குங்கள். இப்பொழுது நீங்கள் அதனுடைய பொருளையும் புரிந்துள்ளீர்கள். குழந்தைகளாகிய நீங்கள் என்னை இராவணனின் தேசத்தில் அழைத்துள்ளீர்கள் என்று தந்தை வந்து கூறுகிறார். நானோ பரந்தாமத்தில் அமர்ந்திருந்தேன். சொர்க்கத்தை ஸ்தாபனை செய்வதற்காக என்னை நரகமான இராவணனின் தேசத்தில் அழைத்துள்ளீர்கள் - இப்பொழுது சுகதாமத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். இப்பொழுது குழந்தைகளாகிய உங்களை அழைத்துச் செல்கிறார் அல்லவா? எனவே இது நாடகமாகும். நான் உங்களுக்கு அளித்திருந்த இராஜ்யம் முடிவடைந்தது. பிறகு துவாபர முதல் இராவண இராஜ்யம் நடந்தது. 5 விகாரங்களில் விழுந்தீர்கள். அது பற்றிய சித்திரங்கள் கூட ஜகந்நாதபுரியில் உள்ளன. முதல் நம்பரில் இருந்தவரே பிறகு 84 பிறவிகள் எடுத்து இப்பொழுது கடைசியில் இருக்கிறார். பிறகு அவர் தான் முதல் நம்பரில் செல்ல வேண்டும். இந்த பிரம்மா அமர்ந்துள்ளார். விஷ்ணு கூட அமர்ந்துள்ளார். இவர்களுக்குள் என்ன தொடர்பு உள்ளது? உலகத்தில் யாருக்குமே தெரியாது. பிரம்மா சரஸ்வதி கூட உண்மையில் சத்யுகத்திற்கு அதிபதியாக இலட்சுமி நாராயணராக இருந்தார்கள். இப்பொழுது நரகத்திற்கு அதிபதி ஆவார்கள். இப்பொழுது இவர்கள் இந்த இலட்சுமி நாராயணராக ஆவதற்காக தபஸ் செய்து கொண்டிருக்கிறார்கள். தில்வாலா கோவிலில் முழுமையாக நினைவார்த்தம் உள்ளது. தந்தை கூட இங்கு தான் வந்துள்ளார். எனவே தான் இப்பொழுது அபுமலை அனைத்து தீர்த்தங்களிலும் அனைத்து தர்மங்களின் தீர்த்தங்களிலும் முக்கியமான தீர்த்தம் என்று எழுதவும் செய்கிறோம். ஏனெனில் இங்கு தான் தந்தை வந்து அனைத்து தர்மங்களுக்கும் சத்கதி செய்கிறார். நீங்கள் சாந்திதாமம் சென்று பிறகு சொர்க்கத்திற்குச் செல்கிறீர்கள். பிற அனைவரும் சாந்திதாமத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். அது ஜட நினைவார்த்தம் ஆகும். இது உயிரூட்டமானது. நீங்கள் உயிரூட்டமாக அதுபோல ஆகிவிடும் பொழுது பிறகு இந்த கோவில்கள் ஆகியவை எல்லாமே முடிந்து போய்விடும். பிறகு பக்தி மார்க்கத்தில் இந்த நினைவார்த்தம் அமைப்பார்கள். இப்பொழுது நீங்கள் சொர்க்கத்தின் ஸ்தாபனை செய்துக் கொண்டிருக்கிறீர்கள். சொர்க்கம் மேலே இருக்கிறது என்று மனிதர்கள் நினைக்கிறார்கள். இதே பாரதம் சொர்க்கமாக இருந்தது. இப்பொழுது நரகமாக உள்ளது என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்துள்ளீர்கள். இந்த சக்கரத்தை பார்த்த உடனேயே முழு ஞானமும் வந்துவிடுகிறது. துவாபர முதல் வேறு வேறு தர்மங்கள் வருகின்றன. ஆக இப்பொழுது பாருங்கள் எவ்வளவு தர்மங்கள் உள்ளன. இது இரும்பு யுகம் ஆகும். இப்பொழுது நீங்கள் சங்கமயுகத்தில் உள்ளீர்கள். சத்யுகத்திற்கு செல்வதற்கான புருஷார்த்தம் (முயற்சி) செய்கிறீர்கள். கலியுகத்தில் எல்லோருமே கல்புத்தியாக உள்ளார்கள். சத்யுகத்தில் தங்க புத்தியாக இருப்பார்கள். நீங்கள் தான் தங்க புத்தியாக இருந்தீர்கள். நீங்கள் தான் பிறகு கல்புத்தியாக ஆகி உள்ளீர்கள். மீண்டும் தங்க புத்தி ஆக வேண்டும். இப்பொழுது தந்தை கூறுகிறார் - நீங்கள் என்னை கூப்பிட்டீர்கள். எனவே நான் வந்துள்ளேன். மேலும் உங்களுக்குக் கூறுகிறேன் - காமத்தை வென்றீர்கள் என்றால் உலகத்தை வென்றவர் ஆகிவிடுவீர்கள்.

முக்கியமானது இந்த விகாரமே ஆகும். சத்யுகத்தில் எல்லோருமே நிர்விகாரியாக இருப்பார்கள். கலியுகத்தில் இருப்பவர்கள் விகாரி. குழந்தைகளே இப்பொழுது நிர்விகாரி ஆகுங்கள் என்று தந்தை கூறுகிறார். 63 பிறவிகள் விகாரத்தில் சென்றுள்ளீர்கள். இப்பொழுது இந்த கடைசி பிறவியில் தூய்மை ஆகுங்கள். இப்பொழுது அனைவருமே சாகத்தான் வேண்டும். நான் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்ய வந்துள்ளேன். எனவே இப்பொழுது என்னுடைய ஸ்ரீமத்படி நடந்து செல்லுங்கள். நான் என்ன கூறுகிறேனோ அதைக் கேளுங்கள். இப்பொழுது நீங்கள் கல்புத்தியை தங்க புத்தியாக ஆக்குவதற்கான முயற்சி செய்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் தான் முழுமையாக படி இறங்குகிறீர்கள். பிறகு ஏறுகிறீர்கள். நீங்கள் ஜின் என்ற பூதம் போல. ஜின் என்ற பூதத்தின் கதை உள்ளது அல்லவா? எனக்கு வேலை கொடு என்று அது கூறியது. ஆக இராஜா கூறினார், நல்லது படி ஏறு மற்றும் இறங்கு. பகவானுக்கு என்ன வந்தது என்று இவ்வாறு படியில் ஏற வைக்கிறார் மற்றும் இறங்க வைக்கிறார் என்று நிறைய மனிதர்கள் கூறுகிறார்கள். பகவானுக்கு என்ன ஆகியது என்று இதுபோல ஏணிபடியை அமைத்தார்! இது அனாதி நாடகம் என்று தந்தை புரிய வைக்கிறார். நீங்கள் 5 ஆயிரம் வருடங்களில் 84 பிறவிகள் எடுத்துள்ளீர்கள். உங்களுக்கு கீழே இறங்குவதற்கு 5 ஆயிரம் வருடங்கள் பிடித்தன. பின் ஒரு நொடியில் மேலே செல்கிறீர்கள். இது உங்களுடைய யோகபலத்தின் லி்ஃப்ட் ஆகும். நினைவு செய்தீர்கள் என்றால் உங்கள் பாவங்கள் நீங்கிவிடும் என்று தந்தை கூறுகிறார். தந்தை வந்துவிடும் பொழுது நீங்கள் ஒரு நொடியில் மேலே ஏறி விடுகிறீர்கள். பின் கீழே இறங்குவதில் 5 ஆயிரம் வருடங்கள் பிடித்தன. கலைகள் குறைந்துக் கொண்டே போகின்றன. ஏறுவதற்கோ லி்ஃப்ட் உள்ளது. ஒரு நொடியில் ஜீவன் முக்தி. சதோபிரதானமாக ஆக வேண்டும். பிறகு மெது மெதுவாக தமோபிரதானமாக ஆகிவிடுவீர்கள். 5 ஆயிரம் வருடங்கள் பிடிக்கின்றது. நல்லது. பிறகு தமோபிரதான நிலையிலிருந்து சதோபிரதானமாக ஒரு பிறவியில் ஆக வேண்டும். இப்பொழுது நான் உங்களுக்கு சொர்க்கத்தின் அரசாட்சி அளிக்கிறேன். எனவே ஏன் நீங்கள் தூய்மையாக ஆகக் கூடாது. ஆனால் காமம் கோபம் ஆகியவை கூட உள்ளன அல்லவா? விகாரம் கிடைக்காமல் இருக்கும்பொழுது பெண்களை அடிக்கிறார்கள். வெளியே தள்ளிவிடுகிறார்கள். நெருப்பிலிடுகிறார்கள். அபலைகள் மீது எவ்வளவு கொடுமைகள் நடக்கின்றன. இதுவும் நாடகத்தில் அமைந்துள்ளது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்துக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

ஓம் சாந்தி. ஆன்மிகக் குழந்தைகளுக்கு பாபா புரிய வைத்துள்ளார், இங்கே குழந்தைகள் நீங்கள் இந்தச் சிந்தனையோடு அவசியம் அமர வேண்டியுள்ளது - இவர் தந்தையாகவும் உள்ளார், ஆசிரியராகவும் உள்ளார், சுப்ரீம் குருவாகவும் உள்ளார். மேலும் இதையும் நீங்கள் உணர்கிறீர்கள், பாபாவை நினைவு செய்து-செய்து தூய்மையாகி, தூய்மையான உலகத்திற்கு சென்றுவிடுவோம். பாபா புரிய வைத்துள்ளார் - தூய்மையான பரந்தாமத்தில் இருந்து தான் நீங்கள் கீழே இறங்கி வந்திருக்கிறீர்கள். முதலில் நீங்கள் சதோபிரதானமாக இருந்தீர்கள். பிறகு சதோ-ரஜோ-தமோவில் வந்தீர்கள். இப்போது நீங்கள் புரிந்துக்

கொண்டிருக்கிறீர்கள், நாம் கீழே விழுந்துவிட்டோம். தற்சமயம் நீங்கள் சங்கமயுகத்தில் இருந்தபோதிலும் ஞானத்தின் மூலம் இதை அறிந்திருக்கிறீர்கள் - நாம் விலகி வந்துவிட்டோம். பிறகு நாம் சிவபாபாவின் நினைவில் இருக்கிறோம் என்றால் சிவாலயம் தொலைவில் இல்லை. சிவபாபாவை நினைவே செய்யவில்லை என்றால் சிவாலயம் அதிக தூரம் உள்ளது. தண்டனைகள் அடைய வேண்டி உள்ளது, அதனால் அதிக தூரமாகிவிடுகின்றது. ஆக, தந்தை குழந்தைகளுக்கு அதிகக் கஷ்டம் கொடுப்பதில்லை. மனம்-சொல்-செயலால் தூய்மையாக வேண்டும் இதை அடிக்கடி சொல்கிறார். இந்தக் கண்களும் கூட அதிகமாக ஏமாற்றுகின்றன. மிகவும் எச்சரிக்கையாக நடக்க வேண்டியுள்ளது.

பாபா புரிய வைத்துள்ளார் - தியானமும் (டிரான்ஸ்) யோகமும் முற்றிலும் வேறுபட்டவை. யோகம் என்றால் நினைவு. கண்களைத் திறந்துக் கொண்டே நினைவு செய்ய முடியும். டிரான்ஸில் போவது யோகம் எனச் சொல்லப்படுவதில்லை. டிரான்ஸில் செல்கின்றனர் என்றால் அது ஞானம் என்றும் சொல்லப்படுவதில்லை யோகம் என்றும் சொல்லப்படுவதில்லை. டிரான்ஸில் செல்பவர்கள் மீது மாயாவும் அதிகம் போரிடுகின்றது. அதனால் இதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது. பாபாவின் விதிமுறைப்படி நினைவு இருக்க வேண்டும். விதிமுறைக்குப் புறம்பான ஏதேனும் காரியம் செய்தால் மாயா முற்றிலும் கீழே வீழ்த்திவிடும். டிரான்ஸில் செல்வதற்கு ஒருபோதும் ஆசையே வைக்கக் கூடாது. இச்சா மாத்திரம் அவித்யா (ஆசை பற்றி அறியாதிருக்க வேண்டும்). நீங்கள் எந்த ஓர் ஆசையும் வைக்கக் கூடாது. பாபா, உங்கள் அனைத்து ஆசைகளையும் கேட்காமலே நிறைவேற்றி வைக்கிறார் - பாபாவின் கட்டளைப்படி நடந்தால் மட்டும் போதும். பாபாவின் கட்டளைக்குப் புறம்பாக நடந்து, தலைகீழான வழியைப் பின்பற்றினால் சொர்க்கத்திற்குச் செல்வதற்கு பதிலாக நரகத்தில் விழ நேரிடலாம். கதை உள்ளது, யானையை முதலை விழுங்கியது என்று. அநேகருக்கு ஞானம் கொடுப்பவர்கள், போக் (பிரசாதம்) வைப்பவர்கள் இன்று இல்லாமல் போயினர். ஏனென்றால் விதிமுறைக்கு விரோதமாக நடக்கின்றனர் என்றால் முழுமையாக மாயாவினுடையவர்கள் ஆகிவிடுகின்றனர். தேவதையாக ஆகி-ஆகியே அசுரராக ஆகிவிடுகின்றனர். அதனால் இது போன்று நடந்து கொள்வதில் அதிக எச்சரிக்கை தேவை. தன் மீது கட்டுப்பாடு வைக்க வேண்டியுள்ளது. பாபாவோ குழந்தைகளுக்கு எச்சரிக்கை விடுக்கிறார். ஸ்ரீமத்துக்கு விரோதமாக நடக்கக் கூடாது. அசுர வழிப்படி நடந்ததால் தான் உங்களுக்கு இறங்கும் கலை ஆயிற்று. எங்கிருந்து ஒரேயடியாக எங்கே வந்து சேர்ந்திருக்கிறீர்கள்! முற்றிலும் கீழே வந்து சேர்ந்திருக்கிறீர்கள். இப்போதும் கூட ஸ்ரீமத் படி நடக்கவில்லை, பொருட்படுத்தாமல் இருந்தீர்கள் என்றால் பதவி மிகக் கீழானதாக ஆகிவிடும். பாபா நேற்றும் கூடப் புரிய வைத்திருந்தார், ஸ்ரீமத்தின் ஆதாரம் இல்லாமல் எது செய்தாலும் சேவைக்கு மிகுந்த குந்தகம் விளைவிப்பதாக ஆகும். ஸ்ரீமத் மீறி எதை செய்தாலும் கீழே விழுந்து கொண்டே தான் செல்வீர்கள். பாபா ஆரம்பத்திலிருந்தே மாதாக்களை நிமித்தமாக வைத்துள்ளார். ஏனென்றால் கலசமும் மாதாக்களுக்குக் கிடைக்கின்றது. வந்தே மாதரம் எனப் பாடப்பட்டுள்ளது. பாபாவும் மாதாக்களின் கமிட்டி ஒன்றை அமைத்தார். அவர்களிடம் அனைத்தையும் ஒப்படைத்தார். பெண் குழந்தைகள் நம்பிக்கைக்கு உரியவர்கள். ஆண்கள் அதிகமாக திவாலாகி (தோற்று)

விடுகின்றனர். ஆகவே பாபாவும் கலசத்தை தாய்மார்கள் மீது வைக்கிறார். இந்த ஞான மார்க்கத்தில் தாய்மார்களும் கூட திவாலாகலாம். பத்மாபதம் பாக்கியசாலி ஆகக் கூடியவர்கள் யாரோ, அவர்களும் கூட மாயாவிடம் தோல்வியுற்று திவாலாக முடியும். இதில் ஆண்-பெண் இருவருமே திவாலாக முடியும். அதில் ஆண்கள் மட்டும் திவாலாகின்றனர். இங்கோ பாருங்கள் எத்தனைப் பேர் தோல்வியுற்றுச் சென்றுவிட்டனர்! அதாவது திவாலாகி விட்டனர் இல்லையா? பாபா வந்துப் புரிய வைக்கிறார் - பாரதவாசிகள் முழுமையாக திவாலாகிப் போயுள்ளனர். மாயா எவ்வளவு சக்தி வாய்ந்ததாக உள்ளது! நாம் என்னவாக இருந்தோம் எனப் புரிந்துக் கொள்ள முடியவில்லை. எங்கிருந்து ஒரேயடியாக கீழே விழுந்து விட்டுள்ளனர்! இங்கேயும் மேலே ஏறி-ஏறிப் பிறகு ஸ்ரீமத்தை மறந்து தன்னுடைய வழிப்படி நடக்கின்றனர் என்றால் திவாலாகி விடுகின்றனர். இப்போது சொல்லுங்கள், அவர்களின் நிலை என்னவாகும்? அவர்களோ திவாலாகின்றனர், பிறகு 5-7 ஆண்டுகளுக்குப் பிறகு எழுந்து நின்று கொள்கின்றனர். இப்படி 84 பிறவிகளுக்கு திவாலாகி விடுகின்றனர். பிறகு உயர்ந்த பதவிப் பெற முடியாது. திவாலாகிக் கொண்டே தான் இருப்பார்கள். எவ்வளவு மகாரதிகள் அநேகரை உயர்த்திவிட்டனர். இன்று அவர்கள் இல்லை. தோல்வி அடைந்துவிட்டார்கள். இங்கே உயர்ந்த பதவிகளோ நிறைய உள்ளன. ஆனால் எச்சரிக்கையாக இல்லை என்றால் மேலிருந்து முற்றிலும் கீழே விழுந்து விடுவார்கள். மாயா விழுங்கிவிடுகின்றது. குழந்தைகள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தன்னுடைய வழிப்படி கமிட்டிகள் முதலியவற்றை அமைப்பது என்றால் அதில் ஒன்றும் இருக்கப் போவதில்லை. பாபாவிடம் புத்தியோகத்தை வையுங்கள் - இதன் மூலம் தான் சதோபிரதானமாக ஆக வேண்டும். பாபாவுடையவர்களாக ஆகிவிட்டுப் பிறகு பாபாவிடம் யோகம் வைக்கவில்லை, ஸ்ரீமத்துக்கு விரோத மாக நடக்கின்றனர் என்றால் உடனே வீழ்ந்துவிடுகின்றனர். தொடர்பே விட்டுப் போய்விடுகிறது. இணைப்பு விடுபட்டுப் போகின்றது. இணைப்பு விடுபட்டால் சோதித்துப் பார்க்க வேண்டும், மாயா நம்மை ஏன் இவ்வளவு தொந்தரவு செய்கிறது? முயற்சி செய்து பாபாவுடன் தொடர்பை இணைக்க வேண்டும். இல்லையென்றால் பேட்டரி எப்படி சார்ஜ் ஆகும்? விகர்மங்கள் செய்வதால் பேட்டரி டிஸ்சார்ஜ் ஆகிவிடுகின்றது. உயரத்தில் ஏறி-ஏறி கீழே விழுந்துவிடுகின்றனர். இதுபோல் அநேகர் உள்ளனர் என்பதை அறிவீர்கள். ஆரம்பத்தில் எவ்வளவு ஏராளமான பேர் வந்து பாபாவுடையவர்களாக ஆனார்கள்! பட்டியில் வந்தனர். பிறகு இன்று அவர்கள் எங்கே சென்றனர்? கீழே விழுந்துவிட்டனர். ஏனென்றால் பழைய உலகம் நினைவு வந்துவிட்டது. இப்போது பாபா சொல்கிறார், நான் இப்போது உங்களை எல்லையற்ற வைராக்கியம் கொள்ள வைக்கிறேன். இந்தப் பழைய தூய்மையற்ற உலகின் மீது மனதை ஈடுபடுத்தக் கூடாது. மனதை சொர்க்கத்தில் ஈடுபடுத்துங்கள். இதில் முயற்சி வேண்டும். இந்த இலட்சுமி-நாராயணராக ஆக விரும்புகிறீர்கள் என்றால் முயற்சி செய்ய வேண்டும். புத்தியோகம் ஒரு தந்தையிடம் இருக்க வேண்டும். பழைய உலகின் மீது வைராக்கியம். நல்லது, பழைய உலகை மறந்துவிட வேண்டும் என்பது நல்லது தான். ஆனால் எதை நினைவு செய்வது? சாந்திதாமம், சுகதாமத்தை நினைவு செய்ய வேண்டும். எவ்வளவு முடியுமோ, அமரும்போதும், எழுந்திருக்கும்போதும், நடமாடும்போதும் பாபாவை நினைவு செய்யுங்கள். எல்லையற்ற சுகத்தின் சொர்க்கத்தினை நினைவு செய்யுங்கள். இது மிகவும் சுலபமானது. இந்த இரண்டு ஆசைகளிலும் தலைகீழாக நடந்தால் பதவி கீழானதாக ஆகிவிடும். நீங்கள்

இங்கே வந்திருப்பதே நரனில் இருந்து நாராயணனாக ஆவதற்குத் தான். அனைவருக்கும் சொல்கிறீர்கள், தமோபிரதானில் இருந்து சதோபிரதானம் ஆக வேண்டும் என்று. ஏனென்றால் திரும்பிச் செல்லும் பயணம் நடைபெறுகின்றது. உலகத்தின் சரித்திரம்-பூகோளம் திரும்பவும் அப்படியே நடைபெறுகிறது என்றால் நரகத் திலிருந்து சொர்க்கம், பிறகு சொர்க்கத்திலிருந்து நரகம். இந்தச் சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. பாபா சொல்லியிருக்கிறார், இங்கே சுயதரிசனச் சக்கரதாரி ஆகி அமர்ந்திருங்கள். இதே நினைவில் இருங்கள், நாம் எத்தனைத் தடவை இந்தச் சக்கரத்தைச் சுற்றியுள்ளோம்? நாம் சுயதரிசனச் சக்கரதாரி, இப்போது மீண்டும் தேவதை ஆகிறோம். உலகில் யாருமே இந்த இரகசியத்தை அறிந்திருக்கவில்லை. இந்த ஞானத்தை தேவதை களுக்கு சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் தூய்மையாகவே இருப்பவர்கள். சங்கொலி எழுப்புவதற்கு அவர்களிடம் ஞானம் கிடையாது. பவித்திரமாகவும் உள்ளனர். அதனால் அவர்களுக்கு அடையாளம் தருவதற்கான தேவை கிடையாது. எப்போது இருவரும் சேர்ந்து சதுர்புஜமாக உள்ளனரோ, அப்போது அடையாளம் உள்ளது. உங்களுக்கும் அடையாள சின்னம் கொடுப்பதில்லை. ஏனென்றால் நீங்கள் இன்று தேவதை, நாளை பிறகு கீழே இறங்கிவிடுகிறீர்கள். மாயா வீழ்த்திவிடுகிறது இல்லையா? பாபா தேவதை ஆக்குகிறார், மாயா பிறகு அசுரனாக்கிவிடுகிறது. அநேக விதமாக மாயா பரீட்சை செய்கிறது. பாபா இப்போது புரிய வைக்கிறார், அதனால் தெரிய வருகிறது. உண்மையிலேயே நமது நிலை கீழானதாகிவிட்டது. எத்தனைப் பேர் பாவம், தங்களின் அனைத்தையும் சிவபாபாவின் கஜானாவில் சேமிப்பாக்கிப் பிறகும் கூட எப்போதாவது மாயாவிடம் தோல்வி அடைந்துவிடுகின்றனர். சிவபாபாவுடையவர்களாக ஆகிவிட்டீர்கள். பிறகு ஏன் மறந்து போகிறீர்கள்? இதில் யோகத்தின் யாத்திரை முக்கியமானதாகும். நினைவினால் தான் தூய்மையாக ஆக வேண்டும். ஞானத்தோடு கூடவே தூய்மையும் வேண்டும். நீங்கள் அழைக்கவும் செய்கிறீர்கள், பாபா வந்து எங்களை தூய்மையாக்குங்கள், அப்போது நாங்கள் சொர்க்கத்திற்குச் செல்ல முடியும். நினைவு யாத்திரையே தூய்மையாகி உயர்ந்த பதவி பெறுவதற்காகத் தான். யார் இங்கிருந்து விட்டுச் சென்றுவிடுகிறார்களோ, பிறகும் ஏதாவது கொஞ்சம் ஞானம் கேட்டுள்ளனர் என்றால் சிவாலயத்திற்கு அவசியம் வருவார்கள். பிறகு பதவி எப்படி வேண்டுமானாலும் அடையலாம், ஆனால் நிச்சயமாக சொர்க்கத்திற்கு வருவார்கள். மற்றப்படி உயர்ந்த பதவி இருக்காது. சொர்க்கம் என்ற பெயரை மட்டும் கேட்டுக் குஷி அடைந்து விடக்கூடாது. .பெயிலாகி ஒன்றுக்கும் உதவாத பதவி பெறுவது என்பதில் குஷியடைந்துவிடக் கூடாது. சொர்க்கம் தான் என்றாலும் அதில் பதவிகளோ அதிகம் உள்ளன இல்லையா? மன வருத்தம் வரத் தான் செய்கிறது இல்லையா? - நான் வேலைக்காரன், நான் தோட்டி! கடைசியில் உங்களுக்கு அனைத்தும் சாட்சாத்காரமாகும் - நாம் என்னவாக ஆவோம்? இந்த நிலை வருவதற்கு நாம் எந்த மாதிரி விகர்மங்கள் செய்துள்ளோம்? நான் ஏன் மகாராணி ஆகவில்லை? ஒவ்வோர் அடியிலும் எச்சரிக்கையாகச் செல்வதால் நீங்கள் பல கோடிக்கு அதிபதி (பதம்பதி) ஆக முடியும். எச்சரிக்கையாக இல்லையென்றால் அதிபதி ஆக முடியாது. கோவில்களில் தேவதைகளுக்கு பதம்பதிக்கான (தாமரை) அடையாளம் காட்டுகின்றனர். வித்தியாசத்தையோ புரிந்துக் கொள்ள முடியும் இல்லையா? பதவிகளிலும் அதிக வித்தியாசம் உள்ளது. இப்போது கூடப் பாருங்கள், பதவிகள் எத்தனை உள்ளன! எவ்வளவு பகட்டு, ஆடம்பரம் உள்ளது! இருப்பதோ

அல்பகால சுகம்! ஆக, பாபா இப்போது சொல்கிறார், இந்த உயர்ந்த பதவி பெற வேண்டும். இதற்காக அனைவரும் கை உயர்த்துகின்றனர் என்றால் அவ்வளவு புருஷார்த்தம் செய்ய வேண்டும். கை உயர்த்துகிறவர்களும் தாங்களே விட்டுப் போகின்றனர். இவர்கள் தேவதை ஆகக்கூடியவர்களாக இருந்தனர் எனச் சொல்வார்கள். புருஷார்த்தம் செய்யும்போதே இல்லாமல் போய் கை உயர்த்துவது சுலபம். அநேகருக்குப் புரிய வைப்பதும் கூட சுலபமானது தான். மற்றவர்களுக்குப் புரிய வைத்துக் கொண்டுள்ள மகாரதிகளும் காணாமல் போய்விடுகின்றனர். மற்றவர்களுக்கு நன்மை செய்துவிட்டுத் தங்களுக்குத் தீமை செய்துக் கொண்டு அமர்ந்துள்ளனர். அதனால் பாபா புரிய வைக்கிறார், எச்சரிக்கையாக இருங்கள். உள்முக நோக்கில் இருந்து பாபாவை நினைவு செய்ய வேண்டும். எந்த விதத்தில்? பாபா நம்முடைய தந்தையாகவும் உள்ளார், ஆசிரியராகவும் உள்ளார், சத்குருவாகவும் உள்ளார், நாம் நம்முடைய இனிய வீட்டுக்குச் சென்றுக் கொண்டிருக்கிறோம். இந்த ஞானம் முழுவதும் உள்ளுக்குள் இருக்க வேண்டும். பாபாவிடம் ஞானம் மற்றும் யோகம் இரண்டும் உள்ளன. உங்களிடமும் இருக்க வேண்டும். சிவபாபா படிப்பு சொல்லித் தருகிறார் என்றால் ஞானமும் ஆகிறது, நினைவும் ஆயிற்று. ஞானம், யோகம் இரண்டும் சேர்ந்தாற்போல் நடைபெறுகின்றன. யோகத்தில் அமர்ந்து சிவபாபாவை நினைவு செய்துக் கொண்டே இருக்கும்போது ஞானம் மறந்துப் போய்விட்டது என்று இருக்கக் கூடாது. பாபா யோகம் கற்றுத் தருகிறார் என்றால் ஞானம் மறந்து விடுமா என்ன? ஞானம் முழுவதும் அவரிடம் உள்ளது. குழந்தைகளாகிய உங்களிடமும் கூட இந்த ஞானம் இருக்க வேண்டும். படிக்க வேண்டும். எப்படிப்பட்ட கர்மத்தை நான் செய்கிறேனோ, என்னைப் பார்த்து மற்றவர்களும் செய்வார்கள். நான் முரளி படிக்கவில்லை என்றால் மற்றவர்களும் படிக்க மாட்டார்கள். நான் எப்படி துர்கதியை அடைவேனோ, அதுபோல் மற்றவர்களும் துர்கதி அடைவார்கள். மற்றவர்களை விழச் செய்வதற்கு நான் ஒரு கருவி ஆகிவிடுவேன். அநேகக் குழந்தைகள் முரளி படிப்பதில்லை. பொய்யான அகங்காரம் வந்துவிடுகின்றது. மாயா உடனே போரிடுகின்றது. ஒவ்வோர் அடியிலும் ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். இல்லையென்றால் ஏதாவது விகர்மம் ஆகிவிடுகின்றது. அநேகக் குழந்தைகள் தவறுகள் செய்கின்றனர். பிறகு அழிந்து போகின்றனர். கவனக்குறைவினால் மாயா அடி கொடுத்து ஒரு பைசாக்கூடப் பெறாதவர்களாக ஆக்கிவிடுகின்றது. இதில் மிகவும் புரிதல் வேண்டும். அகங்காரம் வருவதால் மாயா அதிக விகர்மங்கள் செய்ய வைத்துவிடுகின்றது. கமிட்டி ஏதாவது அமைக்கிறீர்கள் என்றால் அதில் ஓரிரு பெண்களும் அவசியம் இருக்க வேண்டும். அவர்களின் ஆலோசனைப்படி காரியம் நடக்க வேண்டும். கலசமோ லட்சுமி மீது வைக்கப்படுகின்றது இல்லையா? பாடலும் உள்ளது, அமிர்தம் அருந்தச் செய்த போது அசுரர்களும் கூட அமர்ந்து அருந்தினர் என்று. பிறகு எங்காவது யக்ஞத்தில் விக்னம் ஏற்படுத்துகின்றனர். அநேக விதமான விக்னங்களை ஏற்படுத்துகிறவர்கள் உள்ளனர். நாள் முழுவதும் புத்தியில் பரசிந்தனையின் விஷயங்கள் உள்ளன. இது மிகவும் தீயதாகும். ஏதாவது பிரச்சினை என்றால் பாபாவுக்கு ரிப்போர்ட் செய்யுங்கள். சீர்திருத்துபவரோ ஒரு தந்தை தான். நீங்கள் உங்கள் கையில் சட்டத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் தந்தையின் நினைவில் இருங்கள். அனைவருக்கும் தந்தையின் அறிமுகம் கொடுங்கள். அப்போது இதுபோல் ஆக முடியும். மாயா மிகவும் கடுமையானது. அது யாரையும் விட்டு வைப்பதில்லை. சதா தந்தைக்கு செய்தியை எழுதிக்

கொண்டே இருக்க வேண்டும். வழிகாட்டுதல் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். இவ்விதமோ ஒவ்வொரு வழிகாட்டுதலும் கிடைத்துக் கொண்டு தான் இருக்கிறது. குழந்தைகள் புரிந்துக் கொண்டுள்ளனர், பாபாவோ தாமாகவே இந்தப் பிரச்சினையில் புரிய வைக்கலாம், அவர் அந்தர்யாமி (நமக்குள் இருப்பதை அறிவார்) தானே என்று நினைக்கின்றனர். பாபா சொல்கிறார் - அப்படியில்லை, நானோ ஞானம் கற்பிக்கிறேன். இதில் அந்தர்யாமியின் விஷயமே கிடையாது. ஆம், இவர்கள் அனைவரும் என் குழந்தைகள் என்பதை அறிந்துள்ளார். ஒவ்வொருவருக்குள் உள்ள ஆத்மாக்கள் என்னுடைய குழந்தைகள். மற்றபடி தந்தை அனைவருக்குள்ளும் அமர்ந்துள்ளார் என்பது கிடையாது. மனிதர்கள் தலைகீழாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

பாபா சொல்கிறார், நான் அறிவேன், அனைவரின் ஆசனத்திலும் (புருவமத்தி) ஆத்மா அமர்ந்துள்ளது. இதுவோ எவ்வளவு சுலபமான விஷயம்! பிறகும் தவறாக பரமாத்மா சர்வவியாபி எனச் சொல்லிவிடுகின்றனர். இது முக்கியமான ஒரு பிழையாகும். இதன் காரணத்தால் இவ்வளவு கீழே விழுந்துவிட்டுள்ளனர். உலகத்தின் எஜமானர் ஆக்குபவரை நீங்கள் நிந்தனை செய்கிறீர்கள். அதனால் பாபா சொல்கிறார், யதா யதாஹி......... பாபா இங்கே வருகிறார் என்றால் குழந்தைகள் நல்லபடியாக விசார் சாகர் மந்தன் செய்ய வேண்டும். ஞானத்தைப் பற்றி அதிகம் சிந்தனை செய்ய வேண்டும். நேரம் ஒதுக்க வேண்டும் அப்போது உங்களுக்கு நீங்களே நன்மை செய்து கொள்ள முடியும். இதில் பைசா முதலியவற்றின் விசயமும் கிடையாது. யாரும் பட்டினியாலோ சாகமாட்டார்கள். எவ்வளவு பாபாவிடம் சேமிக்கிறார்களோ, அவ்வளவு பாக்கியம் உருவாகின்றது. பாபா புரிய வைத்துள்ளார், ஞானம் மற்றும் பக்திக்குப் பிறகு வைராக்கியம். வைராக்கியம் என்றால் அனைத்தையும் மறந்துவிட வேண்டியுள்ளது. தன்னை பற்றி-ருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும். சரீரத்திலிருந்து நாம் ஆத்மா இப்போது போய்க் கொண்டிருக்கிறோம். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

ஓம் சாந்தி. குழந்தைகள் பாடலைக் கேட்டீர்கள். யாராவது இறக்கும் போது தந்தையிடம் பிறவி எடுக்கின்றனர். சொல்லும் போது தந்தையிடம் பிறவி எடுத்தார் என்றே சொல்வார்கள், தாயின் பெயரைக் குறிப்பிடுவதில்லை. வாழ்த்துகள் தந்தைக்குக் கொடுக்கப்படுகிறது. குழந்தைகளாகிய நீங்கள் இப்போது நாம் ஆத்மாக்கள் என தெரிந்திருக் கிறீர்கள், அது சரீரத்தின் விசயமாகி விட்டது. ஒரு சரீரத்தை விடுத்து மற்றொரு தந்தையிடம் செல்கின்றனர். நீங்கள் 84 பிறவிகள் எடுத்து 84 தந்தைகளை அடைந்தீர்கள். உண்மையில் நீங்கள் நிராகார தந்தையின் அசலான குழந்தைகள். ஆத்மாக்களாகிய நீங்கள் பரமபிதா பரமாத்மாவின் குழந்தைகள். நிர்வாண தாமம் அல்லது சாந்தி தாமம் என சொல்லக் கூடிய அந்த இடத்தில் வசிப்பவர்கள். உண்மையில் நீங்கள் அங்கே வசிப்பவர்கள். தந்தையும் அங்கே வசிக்கிறார். இங்கே வந்து லௌகிக தந்தையின் குழந்தைகள் ஆகும்போது அந்த தந்தையை மறந்து விடுகின்றீர்கள். சத்யுகத்தில் கூட நீங்கள் சுகம்

மிக்கவர்களாக ஆகும்போது அந்த பரலௌகிக தந்தையை மறந்து விடுகின்றீர்கள். சுகத்தில் அந்த தந்தையைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லை. துக்கத்தில் நினைவு செய் கின்றனர். மேலும் நினைவும் கூட ஆத்மாதான் செய்கிறது. லௌகிக தந்தையை நினைவு செய்யும்போது புத்தி சரீரத்தின் பக்கம் இருக்கிறது. இந்த பாபா அந்த பாபாவை நினைவு செய்யும்போது ஓ பாபா ! என சொல்வார். இருவருமே பாபாதான். பாபா என்பதே சரியான வார்த்தையாகும். அவரும் தந்தை, இவரும் தந்தை. ஆத்மா அந்த ஆன்மீகத் தந்தையை நினைக்கும்போது புத்தி அங்கே செல்கிறது. இதை தந்தை வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். இப்போது பாபா வந்துள்ளார், நம்மை தன்னுடையவர்களாக ஆக்கியுள்ளார் என்பது உங்களுக்குத் தெரியும். முதன் முதலில் நான் உங்களை சொர்க்கத்திற்கு அனுப்பினேன். நீங்கள் மிக மிக செல்வந்தர்களாக இருந்தீர்கள், பிறகு 84 பிறவிகள் எடுத்து நாடகத்தின் திட்டத்தின்படி நீங்கள் துக்கம் நிறைந்தவர்களாக ஆகியுள்ளீர்கள். இப்போது நாடகத்தின்படி துக்கத்தின் உலகம் அழிய வேண்டியுள்ளது. உங்களுடைய ஆத்மா மற்றும் சரீரம் இரண்டுமே சதோபிரதானமாக இருந்தன, பிறகு தங்க யுகத்திலிருந்து வெள்ளி யுகத்திற்கு ஆத்மா வரும்போது சரீரமும் வெள்ளி யுகத்தில் வந்தது, பிறகு தாமிர யுகத்தில் வந்தது. இப்போது உங்களுடைய ஆத்மா முற்றிலுமே பதிதமாகி விட்ட போது சரீரமும் கூட பதிதமாக உள்ளது - யாரும் விரும்பாத 14 காரட் தங்கத்தைப் போல. அது கருப்பாகி விடுகிறது. நீங்களும் கூட இப்போது கருப்பாக இரும்பு யுகத்தவர்களாக ஆகி விட்டீர்கள். இப்போது ஆத்மா மற்றும் சரீரம் இப்படி கருப்பாகி விட்டிருக்கும்போது எப்படி தூய்மையாகும்? ஆத்மா தூய்மையடையும் போது சரீரமும் தூய்மையாக கிடைக்கும். அது எப்படி நடக்கும்? கங்கா ஸ்நானம் செய்வதன் மூலமா? அல்ல. ஓ பதீத பாவனா ! என்றே கூக்குரலிடவும் செய்கின்றனர். இதை ஆத்மா சொல்கிறது. புத்தி பரலௌகிக தந்தையிடம் சென்று விடுகிறது - ஓ பாபா ! வாருங்கள், பாபா எனும் வார்த்தையே எவ்வளவு இனிமையாக உள்ளது. பாரதத்தில் தான் பாபா, பாபா என சொல்கின்றனர். இப்போது நீங்கள் ஆத்மாபிமானியாகி பாபாவுடையவர்களாக ஆகியுள்ளீர்கள். நான் உங்களை சொர்க்கத்திற்கு அனுப்பியிருந்தேன், புதிய சரீரத்தை தாரணை செய்திருந்தீர்கள் என தந்தை சொல்கிறார். இப்போது நீங்கள் என்னவாக ஆகிவிட்டிருக்கிறீர்கள். இந்த விஷயங்கள் எப்போதும் உள்ளுக்குள் இருக்க வேண்டும். பாபாவைத் தான் நினைவு செய்ய வேண்டும். ஓ பாபா ! ஆத்மாக்களாகிய நாங்கள் தூய்மை இழந்துவிட்டோம், இப்போது நீங்கள் வந்து தூய்மையாக்குங்கள் என நினைவு செய்கின்றனர் அல்லவா. நாடகத்திலும் இந்த நடிப்பு இருக்கிறது, ஆகையால் அழைக்கின்றனர். நாடகத்தின் திட்டப்படி அவர் திரும்பவும் வரும்போது கூட பழைய உலகம் புதியதாக ஆக வேண்டி உள்ளது எனவே சங்கம யுகத்தில்தான் வருவார்.

மிக மிக அன்பான பாபா என குழந்தைகளாகிய உங்களுக்கு நிச்சயம் இருக்கிறது. அன்பான, மிக அன்பான, மிக மிக அன்பான என சொல்லவும் செய்கின்றனர். லௌகிக சம்மந்தங்களில் முதலாவது தந்தை ஆகும், அவர் பிறவியைக் கொடுக்கிறார். பிறகு ஆசிரியர். அவர் நல்லவர். அவரிடம் படித்து பதவியை அடைகிறீர்கள். ஞானம் வருமானத்திற்கான வழி என சொல்லப்படுகிறது. ஞானம் என்பது அறிவு. யோகம் என்பது நினைவு. ஆக, எல்லைக்கப்பாற்பட்ட தந்தை, அவர் உங்களை சொர்க்கத்திற்கு எஜமானாக ஆக்கியிருந்தார், அவரை

நீங்கள் இப்போது மறந்து விட்டீர்கள். சிவபாபா எப்படி வந்தார் என யாருக்கும் தெரியாது. படங்களிலும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. பிரம்மா மூலம் சிவபாபா ஸ்தாபனை செய்விக்கிறார். கிருஷ்ணர் எப்படி இராஜயோகம் கற்பிப்பார்? இராஜயோகம் கற்பிப்பதே சத்யுகத்திற்காக. எனவே கண்டிப்பாக சங்கமயுகத்தில் தந்தைதான் கற்பித்திருப்பார். சத்யுகத்தை ஸ்தாபனை செய்பவர் பாபா. சிவபாபா இவர் (பிரம்மா) மூலம் செய்விக்கிறார், அவர் செய்து செய்விப்பவர் அல்லவா. அவர்கள் திரிமூர்த்தி பிரம்மா என சொல்லி விடுகின்றனர். உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் சிவன் அல்லவா. இவர் சாகாரத்தில் (ஸ்தூலத்தில்) இருப்பவர், அவர் நிராகாரமாக இருப்பவர். சிருஷ்டியும் இங்குதான் இருக்கிறது. இந்த சிருஷ்டியினுடையது தான் சக்கரம், அது சுற்றிக் கொண்டே இருக்கும், மீண்டும் மீண்டும் நடந்தபடி இருக்கும். சூட்சும வதனத்தை சிருஷ்டியின் சக்கரம் என பாடப்படுவதில்லை. உலகில் மனிதர்களின் வரலாறு புவியியல் மீண்டும் மீண்டும் நடந்தபடி இருக்கும். சூட்சும வதனத்தில் சக்கரம் எதுவும் இருப்பதில்லை. உலகத்தின் வரலாறு புவியியல் மீண்டும் மீண்டும் நடக்கும் என பாடவும் செய்கின்றனர். அது இங்குள்ள விசயமாகும். சத்யுகம்-திரேதா-துவாபர- கலி . . . இடையில் கண்டிப்பாக சங்கமயுகம் தேவை. இல்லாவிட்டால் கலியுகத்தை சத்யுகமாக யார் மாற்றுவார்? நரகவாசிகளை சொர்க்கவாசிகளாக ஆக்க தந்தை சங்கமயுகத்தில் வருகிறார். இது உயர்வான அத்தாரிட்டியான இறைத் தந்தையின் பல்கலைக் கழகமாகும். கூடவே தர்மராஜாவும் இருக்கிறார். குணமற்றவனாகிய எனக்குள் எந்த குணமும் இல்லை என ஆத்மா சொல்கிறது. யார் தேவதைகளின் கோவில்களுக்குச் சென்றாலும் அவர்களுக்கு முன்பாக இப்படி சொல்கின்றனர். சொல்ல வேண்டியது தந்தைக்கு முன்பாக. அவரை விட்டு விட்டு சகோதரர்களை (தேவதைகளை) வந்து பிடித்துக் கொள்கிறார்கள். இந்த தேவதை கள் சகோதரர்கள் அல்லவா. சகோதரர்களிடமிருந்து எதுவும் கிடைக்காது. சகோதரர்களுக்கு பூஜை செய்து செய்து கீழே இறங்கியே வந்தனர். பாபா வந்துள்ளார், அவரிடமிருந்து நமக்கு ஆஸ்தி கிடைக்கிறது என இப்போது குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். தந்தையையே தெரிந்து கொள்வது கிடையாது, எங்கும் நிறைந்தவர் என சொல்லி விடுகின்றனர். ஒரு சிலர் அகண்ட ஜோதி தத்துவம் என சொல்கின்றனர். சிலர் அவர் பெயர் உருவத்திற்கு அப்பாற்பட்டவர் என சொல்கின்றனர். அகண்ட ஜோதி சொரூபம் எனும்போது பெயர் உருவத்திற்கு அப்பாற்பட்டவர் என எப்படி சொல்கிறீர்கள்? தந்தையை அறிந்து கொள்ளாத காரணத்தால்தான் தூய்மை இழந்து விட்டனர். தமோபிரதானமாகவும் ஆகவே வேண்டியுள்ளது. பிறகு தந்தை வரும்போது அனைவரையும் சதோபிர தானமாக ஆக்குகிறார். ஆத்மாக்கள் அனைத்தும் நிராகார உலகத்தில் தந்தையுடன் இருக்கும், பிறகு இங்கே சதோ-ரஜோ-தமோவில் வந்து நடிப்பை நடிக்கின்றன. ஆத்மாதான் தந்தையை நினைவு செய்கிறது. தந்தை வருகிறார், பிரம்மா உடலின் ஆதாரம் எடுக்கிறேன் என சொல்லவும் செய்கிறார். இவர் பாக்கியசாலி ரதமாக இருக்கிறார். ஆத்மா இல்லாமல் ரதம் இருக்க முடியாது. இது ஞானமழை என இப்போது குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைத்தார், ஞானத்தின் மூலம் என்ன நடக்கிறது? தூய்மையற்ற உலகிலிருந்து தூய்மையான உலகம் உருவாகிறது. கங்கை-யமுனை சத்யுகத்திலும் இருக்கும். கிருஷ்ணர் யமுனை நதிக்கரையில் விளையாடுகிறார் என சொல்கின்றனர். இப்படி எந்த விசயமும் கிடையாது. அவர் சத்யுகத்தின் இளவரசர். மிகவும் நல்ல முறையில் அவர்

வளர்க்கப்படுகிறார், ஏனென்றால் மலர் அல்லவா. மலர்கள் எவ்வளவு நன்றாக அழகாக இருக்கின்றன. முள் நிறைந்த காட்டை தந்தை வந்து மலர்த் தோட்டமாக ஆக்குகிறார், ஆகையால் அவரது பெயர் பபூல் நாத் (முள்ளை மலராக்குபவர்) என வைத்து விட்டுள்ளனர். முட்களை மலராக்குகிறார், ஆகையால் மகிமை பாடுகின்றனர் - முட்களை மலராக்கும் பாபா. இப்போது தந்தையின் மீது குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு அன்பு இருக்க வேண்டும். அந்த லௌகிக தந்தையோ உங்களை சாக்கடையில் போடுகிறார். இந்த தந்தை 21 பிறவிகளுக்கு உங்களை சாக்கடையிலிருந்து வெளியேற்றி தூய்மையாக்குகிறார். அவர் உங்களை தூய்மை இழக்க வைக்கிறார், ஆகவேதான் லௌகிக தந்தை இருந்த போதும் பரலௌகிக தந்தையை ஆத்மா நினைவு செய்கிறது.

அரை கல்பம் தந்தையை நினைவு செய்தோம் என நீங்கள் இப்போது அறிகிறீர்கள். தந்தை கண்டிப்பாக வரவும் செய்கிறார். சிவ ஜெயந்தி கொண்டாடுகின்றனர் அல்லவா. நாம் எல்லைக்கப்பாற்பட்ட தந்தையுடையவராகி இருக்கிறோம் என நீங்கள் அறிவீர்கள். இப்போது நம்முடைய சம்மந்தம் அவருடனும் இருக்கிறது மற்றும் லௌகிக தந்தையுடனும் இருக்கிறது. பரலௌகிக தந்தையை நினைவு செய்வதன் மூலம் நீங்கள் தூய்மை அடைவீர்கள். அவர் நம்முடைய லௌகிக தந்தை மற்றும் இவர் பரலௌகிக தந்தை என ஆத்மாவுக்குத் தெரியும். பக்தி மார்க்கத்திலும் கூட இது ஆத்மாவுக்குத் தெரியும். ஆகவேதான் ஓ பகவானே, ஓ இறைத் தந்தையே ! என அழைக்கின்றனர். அழிவற்ற தந்தையை நினைவு செய்கின்றனர். அந்த தந்தை வந்து சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கிறார். இது யாருக்கும் தெரியாது. சாஸ்திரங்களில் யுகங்களுக்கும் கூட மிகவும் நீண்ட ஆயுளைக் கொடுத்து விட்டனர். தந்தை தூய்மையற்றவரை தூய்மைப்படுத்த வருகிறார் என்பது யாருடைய சிந்தனையிலும் வருவதில்லை. ஆக கண்டிப்பாக சங்கம யுகத்தில் வருவார். கல்பத்தின் ஆயுளை இலட்சக்கணக்கான வருடங்கள் என எழுதி மனிதர்களை முற்றிலும் அடர்ந்த காரிருளில் தள்ளி விட்டனர். தந்தையை அடைவதற்காக அடிவாங்கியபடி இருக்கின்றனர். யார் அதிகம் பக்தி செய்கின்றனரோ, அவர்களுக்கு பகவான் கிடைப்பார் என சொல்கிறார். அனைவரையும் விட அதிக பக்தி செய்பவர்களுக்கு கண்டிப்பாக முன்னதாகவே கிடைக்க வேண்டும். தந்தை கணக்கும் கூட சொல்லியிருக்கிறார் - அனைவரையும் விட முன்னதாக பக்தி நீங்கள் செய்கிறீர்கள். எனவே உங்களுக்குத்தான் முதன் முதலில் பகவான் மூலம் ஞானம் கிடைக்க வேண்டும், நீங்கள்தான் பிறகு புதிய உலகத்தில் இராஜ்யம் செய்வீர்கள். எல்லைக்கப்பாற்பட்ட தந்தை குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார், இதில் கஷ்டப்படக் கூடிய விசயம் எதுவுமில்லை. நீங்கள் அரைக் கல்பம் நினைவு செய்தீர்கள் என தந்தை சொல்கிறார். சுகத்தில் யாரும் நினைவு செய்வதே இல்லை. இறுதியில் துக்கம் மிக்கவர்களாக ஆகிவிடும்போது நான் வந்து சுகம் மிக்கவர்களாக ஆக்குகிறேன். இப்போது நீங்கள் பெரிய மனிதர்களாக ஆகிறீர்கள். முதலமைச்சர், பிரதமர் போன்றவர்களின் பங்களாக்கள் எவ்வளவு முதல் தரமாக உள்ளது. அங்கே (சத்யுகத்தில்) பசுக்கள் முதலானவை, (ஆசனங்கள் போன்ற) ஃபர்னிச்சர்கள் முழுவதும் அதுபோல முதல் தரமாக இருக்கும். நீங்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாக (தேவதைகளாக) ஆகிறீர்கள். அங்கே உங்களுக்கான மாளிகைகள்

கூட வைர வைடூரியங்களால் உருவாக்கப் பட்டதாக இருக்கும். அங்கே உங்களுடைய ஃபர்னிச்சர்கள் தங்கத்தால் ஆனதாக முதல் தரமானதாக இருக்கும். இங்கே ஊஞ்சல் முதலானவை அனைத்துமே மிகவும் கீழ்தரமானதாக இருக்கிறது. அங்கேயோ அனைத்து பொருட்களுமே முதல் தரமான வைர வைடூரியங்களால் ஆனதாக இருக்கும். இது ருத்ர ஞான யக்ஞம். சிவனை ருத்ரன் எனவும் சொல்கின்றனர். பக்தி முடிவடையும்போது பகவான் ருத்ர ஞான யக்ஞத்தைப் படைக்கிறார். சத்யுகத்தில் யக்ஞம் அல்லது பக்தியின் விசயமே இருக்காது. இந்த சமயத்தில்தான் தந்தை இந்த அழிவற்ற ருத்ர ஞான யக்ஞத்தைப் படைக்கிறார், பின்னர் இதனுடைய புகழ் பாடப்படுகிறது. பக்தி எப்போதுமே நடந்து கொண்டிருக்காது. பக்தி மற்றும் ஞானம். பக்தி இரவாகும், ஞானம் பகலாகும். தந்தை வந்து பகலாக ஆக்குகிறார் எனும்போது குழந்தைகளுக்கு தந்தையின் மீது எவ்வளவு அன்பு இருக்க வேண்டும். பாபா நம்மை உலகின் எஜமானாக ஆக்குகிறார். மிகவும் அன்பான தந்தையாவார். அவரை விடவும் அன்பான பொருள் எதுவும் இருக்க முடியாது. பாபா வந்து எங்களுடைய துக்கத்தை நீக்குங்கள் என்று அரைக் கல்பமாக நினைவு செய்தபடி வந்தீர்கள் - இப்போது தந்தை வந்துள்ளார். நீங்கள் உங்களுடைய இல்லற விசயங்களில் இருக்கத்தான் வேண்டும். இங்கே (மதுபன்) பாபாவுடன் எதுவரை அமர்ந்திருப்பீர்கள். தந்தையுடன் பரமதாமத்தில்தான் இருக்கமுடியும். இங்கே இவ்வளவு குழந்தைகள் எல்லோரும் இருக்க முடியாது. ஆசிரியர் எப்படி கேள்வி கேட்பார்? ஒலிபெருக்கியில் பதில் எப்படி கொடுக்க முடியும்? ஆகையால் கொஞ்சம் கொஞ்சம் மாணவர்களுக்குப் கற்க்கிறார். கல்லூரிகள் நிறைய உள்ளன, பிறகு அனைவருக்கும் பரீட்சை நடக்கிறது. தேர்வு முடிவுகள் வெளியாகின்றன. இங்கேயோ ஒரு தந்தைதான் கற்பிக்கிறார். துக்கத்தில் அனைவரும் அந்த பரலௌகிக தந்தையை நினைக்கின்றனர். இப்போது இந்த தந்தை வந்து விட்டார். மிகப் பெரிய மகாபாரதச் சண்டையும் கூட கண் முன் இருக்கிறது. மகாபாரத யுத்தத்தில் கிருஷ்ணர் வந்தார் என அவர்கள் புரிந்து கொள்கின்றனர். அது நடக்க வாய்ப்பில்லை. பாவம் குழப்பமாகி விட்டார்கள் அல்லவா. எனினும் கூட கிருஷ்ணா, கிருஷ்ணா என நினைவு செய்தபடி இருக்கின்றனர். இப்போது மிகவும் அன்பான சிவனும் இருக்கிறார், கிருஷ்ணரும் இருக்கிறார். ஆனால் அவரோ நிராகாரமாக இருப்பவர், இவர் சாகாரத்தில் இருப்பவர். நிராகார தந்தை அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தை ஆவார். இருவருமே மிகவும் அன்பானவர்கள்தான். கிருஷ்ணரும் உலகின் எஜமான் அல்லவா. அதிகமான அன்பானவர் யார் என இப்போது நீங்கள் தீர்மானிக்க முடியும். சிவபாபாதான் இப்படி தகுதி வாய்ந்தவராக ஆக்குகிறார் அல்லவா. கிருஷ்ணர் என்ன செய்கிறார்? தந்தைதான் அவரை அப்படி உருவாக்குகிறார், எனவே பாடலும் கூட அந்த தந்தையுடையதாக இருக்க வேண்டும். சங்கரின் நடனத்தைக் காட்டுகின்றனர். உண்மையில் நடனம் முதலான விசயம் இல்லை. நீங்கள் அனைவரும் பார்வதிகள் என தந்தை புரிய வைத்துள்ளார். இந்த சிவனாகிய அமர்நாத் உங்களுக்கு கதை சொல்லிக் கொண்டிருக்கிறார். அது நிர்விகாரி உலகம். விகாரத்தின் விசயம் கிடையாது. தந்தை விகாரி உலகத்தைப் படைக்க மாட்டார். விகாரத்தில்தான் துக்கம் உள்ளது. மனிதர்கள் ஹடயோகம் முதலானவைகளை நிறைய கற்கின்றனர். குகைகளில் சென்று அமர்கின்றனர், நெருப்பில் கூட நடந்து செல்கின்றனர். மந்திர தந்திரங்களும் நிறைய இருக்கின்றன. மாயாஜாலத்தின் மூலம் நிறைய பொருட்களை வெளிப் படுத்துகின்றனர். பகவானையும் கூட மந்திரவாதி, ரத்தின

வியாபாரி, வியாபாரி என்றெல்லாம் சொல்கின்றனர் எனும் போது கண்டிப்பாக சைதன்யமானவர் அல்லவா. நான் ஆத்மாவாக இருக்கிறேன் என சொல்லவும் செய்கிறார், மந்திரவாதி அல்லவா. மனிதரை தேவதையாக, பிச்சைக் காரரிலிருந்து இளவரசனாக ஆக்குகிறார். இப்படிப்பட்ட மாயாஜாலம் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

ஓம் சாந்தி. இது புருஷோத்தம சங்கமயுகம் என ஆன்மீகக் குழந்தைகள் அறிவார்கள். தனது எதிர்காலத்தின் புருஷோத்தம முகத்தைப் பார்க்கிறீர்களா? புருஷோத்தம சரீரத்தைப் பார்க்கிறீர்களா? நாம் மீண்டும் புதிய உலகமாகிய சத்யுகத்தில் இவர்களுடைய (லட்சுமி நாராயணருடைய) வம்சாவளியில் செல்லப் போகிறோம் அதாவது சுகதாமத்திற்குச் செல்லப் போகிறோம் அதாவது புருஷோத்தமராக ஆகப் போகிறோம் என உணர்கிறீர்கள். அமர்ந்தபடியே இந்த சிந்தனைகள் வருகின்றனவா! மாணவர்களுக்கு தாம் படிக்கும் படிப்பு, தாம் படிக்கும் வகுப்பு கண்டிப்பாக புத்தியில் இருக்குமல்லவா - பிறகு நான் வக்கீல் அல்லது இன்னாராக ஆகப் போகிறேன் என்று எண்ணுவார்கள். அதுபோல நீங்களும் கூட இங்கே அமரும்போது நாம் விஷ்ணுவின் இராஜ்யத்தில் வருவோம் என அறிகிறீர்கள். விஷ்ணுவின் இரண்டு ரூபங்கள் - லட்சுமி-நாராயணன், தேவி-தேவதைகள். உங்களுடைய புத்தி இப்போது அலௌகிகமாக உள்ளது. வேறு யாருடைய புத்தியும் இந்த விஷயங்களை நினைத்து ரசிப்பதில்லை. குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் இந்த அனைத்து விஷயங்களும் உள்ளன. இது எதுவும் பொதுவான சத்சங்கம் அல்ல. இங்கே அமர்ந்திருக்கும்போது சிவன் என சொல்லப்படும் சத்தியமான தந்தையுடன் அமர்ந்திருக்கிறோம் எனப் புரிந்துக் கொள்கிறீர்கள். சிவபாபாதான் படைப்பவர், அவரே சிருஷ்டியின் முதல்-இடை-கடைசியை அறிவார், அந்த ஞானத்தையும் கொடுக்கிறார். நேற்றைய விஷயத்தைப் போல சொல்கிறார். இங்கே அமர்ந்திருக்கும் போது நாம் புத்துணர்ச்சி அடைவதற்காக வந்தோம் அதாவது இந்த சரீரத்தை மாற்றி தேவதா சரீரம் எடுப்போம் என்று இந்த நினைவு இருக்குமல்லவா. ஆத்மா சொல்கிறது - என்னுடைய இந்த பழைய தமோபிரதான சரீரத்தை மாற்றி இப்படி லட்சுமி-நாராயணன் போல் ஆக வேண்டும். இலட்சியம், குறிக்கோள் எவ்வளவு உயர்வானது. கற்பிக்கக் கூடிய ஆசிரியர் கற்கின்ற மாணவர்களை விடவும் புத்திசாலியாக இருப்பார் அல்லவா. கல்வி கற்பிக்கிறார், நல்ல கர்மங்களை கற்பிக்கிறார் எனும்போது கண்டிப்பாக உயர்வானவராக இருப்பார் அல்லவா. நம்மை அனைவரிலும் உயர்ந்தவரிலும் உயர்வான பகவான் கற்பிக்கிறார் என நீங்கள் அறிவீர்கள். எதிர்காலத்தில் நாமே தேவதைகளாக ஆகப் போகிறோம். நாம் படிப்பது எதிர்காலத்தின் புதிய உலகத்திற்காக. மற்ற யாருக்கும் புதிய உலகத்தைப் பற்றி தெரியாது. இந்த இலட்சுமி-நாராயணர் புதிய உலகத்தின் எஜமானர்களாக இருந்தனர் என உங்களுடைய புத்தியில் இப்போது வருகிறது. கண்டிப்பாக மீண்டும் நடக்கும். உங்களுக்கு கற்பித்து மனிதரிலிருந்து தேவதைகளாக ஆக்குகிறேன் என தந்தைப் புரிய வைக்கிறார். தேவதைகளிலும் கண்டிப்பாக வரிசைக்கிரமமாக

இருப்பார்கள். தெய்வீக இராஜ்யமாக இருக்குமல்லவா. நாம் ஆத்மா என்ற சிந்தனையே முழு நாளும் நடந்து கொண்டிருக்கும் அல்லவா. நம்முடைய ஆத்மா மிகவும் தூய்மையற்றிருந்தது, அது இப்போது தூய்மையடைவதற்காக தூய்மையான தந்தையை நினைவு செய்கிறது. நினைவு என்பதன் அர்த்தத்தையும் புரிந்துக் கொள்ள வேண்டும். ஆத்மா தனது இனிமையான தந்தையை நினைவு செய்கிறது. குழந்தைகளே, என்னை நினைவு செய்வதன் மூலம் நீங்கள் சதோபிரதானமாகிவிடுவீர்கள் என தந்தை தாமே சொல்கிறார். நினைவின் யாத்திரையில்தான் முழு ஆதாரமும் உள்ளது. குழந்தைகளே எவ்வளவு நேரம் நினைவு செய்கிறீர்கள்? என தந்தை கண்டிப்பாக கேட்பார் அல்லவா. நினைவு செய்வதில்தான் மாயையின் சண்டை ஏற்படுகிறது. இது யாத்திரை அல்ல, ஆனால் சண்டை, இதில் அதிகமாக தடைகள் ஏற்படு கின்றன என நீங்கள் தாமே புரிந்து கொள்கிறீர்கள். நினைவின் யாத்திரையில் இருப்பதில்தான் மாயை தடைகளை ஏற்படுத்துகிறது, அதாவது நினைவை மறக்கடிக்கிறது. பாபா நாங்கள் உங்களின் நினைவில் இருப்பதில் மாயையின் புயல்கள் அதிகமாக வீசுகின்றன என சொல்லவும் செய்கின்றனர். தேக அபிமானத்தின் புயலே முதல் நம்பர் ஆகும். அதன் பிறகு இருப்பவை காமம், கோபம், பேராசை, மோகம், . . . பாபா, நாங்கள் நினைவில் இருப் பதில் எந்த தடையும் இருக்கக் கூடாது என மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனாலும் புயல்கள் வீசுகின்றன என குழந்தைகள் கூறுகின்றனர். இன்று கோபத்தின் புயல். . . இன்று பேராசையின் புயல் வீசியது. இன்று எங்களுடைய நிலை நன்றாக இருந்தது, எந்தப் புயலும் வீசவில்லை. நினைவின் யாத்திரையில் முழு நாளும் இருந்தோம், மிகவும் குஷியாக இருந்தது. பாபாவை மிகவும் நினைவு செய்தோம். நினைவில் அன்பின் கண்ணீர் சிந்தியபடி இருக்கின்றோம் இவ்வாறெல்லாம் கூறுகின்றனர். தந்தையின் நினைவில் இருப்பதன் மூலம் நீங்கள் இனிமையானவர்களாக ஆகிவிடுவீர்கள்.

நாம் மாயையிடம் தோற்று, தோற்று இதுவரை வந்து சேர்ந்திருக்கிறோம் என்பதையும் கூட குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துக் கொள்கிறீர்கள். குழந்தைகள் கணக்கு எடுக்கின்றனர். கல்பத்தில் எத்தனை மாதங்கள், எத்தனை நாட்கள். . . புத்தியில் வருகிறது அல்லவா. இலட்சக்கணக்கான வருடங்கள் என யாராவது சொன்னால் பிறகு கணக்கிட இயலாது. தந்தைப் புரிய வைக்கிறார் - இந்த சிருஷ்டியின் சக்கரம் சுற்றியபடி இருக்கும், இந்த முழு சக்கரத்தில் நாம் எத்தனை பிறவிகள் எடுக்கிறோம், எப்படி இராஜ்யத்தில் செல்கிறோம். இதை அறிவீர்கள் அல்லவா. இது புதிய உலகத்திற்கான புதிய விஷயங்கள், புதிய ஞானமாகும். புதிய உலகம் என சொர்க்கத்தை சொல்லப்படுகிறது. நாம் இப்போது மனிதர்களாக இருக்கிறோம், தேவதைகளாக ஆகிக் கொண்டிருக்கிறோம் என நீங்கள் சொல்வீர்கள். தேவதா பதவி உயர்வானதாகும். நாம் அனைவரை விடவும் தனிப்பட்ட ஞானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். நமக்கு கற்பிப்பவர் முற்றிலும் தனிப்பட்ட விசித்திரமானவர். அவருக்கு இந்த சாகார (ஸ்தூல) சித்திரம் (உடல்) கிடையாது. அவர் நிராகாரமாக இருக்கிறார். ஆக, பாருங்கள், நாடகத்தில் எப்படி நல்ல நடிப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்று. தந்தை எப்படி கற்பிப்பார்? எனவே தாமே தெரியப்படுத்துகிறார் - நான் இன்னாருடைய உடலில் வருகிறேன். எந்த உடலில் வருகிறேன் என்பதையும் தெரியப்படுத்துகிறார். ஒரே உடலில் வருவாரா என மனிதர்கள் குழம்புகின்றனர்.

ஆனால் இது நாடகமல்லவா. இதில் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. இந்த விஷயங்களை நீங்கள்தான் கேட்கிறீர்கள், தாரணை செய்கிறீர்கள் மற்றும் சொல்கிறீர்கள் - எப்படி எங்களுக்கு சிவபாபா படிப்பை சொல்லித் தருகிறார்; நாங்கள் பிறகு மற்ற ஆத்மாக்களுக்கு எப்படி படிப்பை சொல்லித் தருகிறோம். ஆத்மா படிக்கிறது. ஆத்மாதான் கற்கிறது, கற்பிக்கிறது. ஆத்மா மிகவும் மதிப்பு வாய்ந்தது. ஆத்மா அழிவற்றது, அமரனாக இருப்பது. சரீரம் மட்டுமே அழிந்துப் போகிறது. ஆத்மாக்களாகிய நாம் பரமபிதா பரமாத்மாவிடமிருந்து ஞானத்தை கற்றுக் கொண்டிருக்கிறோம். படைப்பவர் மற்றும் படைப்பின் முதல்-இடை-கடைசி, 84 பிறவிகளின் ஞானத்தை அறிந்துக் கொண்டிருக்கிறோம். ஞானத்தை யார் பெறுகிறார்? ஆத்மா. ஆத்மா அழிவற்றது. மோகப் பற்றுதலும் கூட அழிவற்ற பொருளின் மீது வைக்க வேண்டும், அழியக் கூடிய பொருளின் மீது அல்ல. இவ்வளவு சமயம் நீங்கள் அழியக்கூடிய சரீரத்தின் மீது மோகம் வைத்து வந்தீர்கள். இப்போது புரிந்துக் கொள்கிறீர்கள் - நான் ஆத்மா, சரீரத்தின் உணர்வை விட வேண்டும். ஆத்மாவாகிய நான் இந்த வேலை செய்தேன் என ஒரு சிலர் எழுதவும் செய்கின்றனர். ஆத்மாவாகிய நான் இந்த சொற்பொழிவு ஆற்றினேன். ஆத்மாவாகிய நான் இன்று மிகவும் பாபாவை நினைவு செய்தேன். அவர் உயர்வான (சுப்ரீம்) ஆத்மா, ஞானம் நிறைந்தவர். குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு ஞானம் கொடுக்கிறார். மூல வதனம், சூட்சும வதனத்தை நீங்கள் அறிவீர்கள். மனிதர்களின் புத்தியில் எதுவும் இல்லை. படைப்பவர் யார் என்பது உங்களுடைய புத்தியில் உள்ளது. இந்த மனித சிருஷ்டியைப் படைப்பவர் பாடப்படுகிறார் எனும்போது கண்டிப்பாக காரியம் செய்ய வருகிறார்.

ஆத்மா மற்றும் பரமாத்மாவின் நினைவு இருக்கக் கூடிய மனிதர் யாரும் கிடையாது என நீங்கள் அறிவீர்கள். தன்னை ஆத்மா என புரிந்து கொள்ளுங்கள் என தந்தைதான் ஞானம் கொடுக்கிறார். நீங்கள் தன்னை சரீரம் என புரிந்து கொண்டு தலைகீழாக தொங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆத்மா என்பது சத் (சத்ய மான), சித் (உயிரோட்டமிக்க), ஆனந்த சொரூபமானது. அனைத்தையும் விட மகிமை ஆத்மாவுக்கு உள்ளது. ஒரு தந்தையின் ஆத்மாவுக்கு எவ்வளவு மகிமை உள்ளது. அவர்தான் துக்கத்தை நீக்கி சுகத்தைக் கொடுக்க வல்லவர். துக்கத்தை நீக்கி சுகத்தைக் கொடுப்பவர், ஞானக் கடல் என கொசு முதலானவற்றை மகிமை செய்வதில்லை. இது தந்தையின் மகிமை ஆகும். நீங்கள் ஒவ்வொருவரும் கூட துக்கத்தை நீக்கி சுகத்தைக் கொடுப்பவர்கள்தான். ஏனெனில் அனைவரின் துக்கத்தையும் நீக்கி சுகத்தைக் கொடுக்கும் அந்த தந்தையின் குழந்தைகள் அல்லவா. அதுவும் அரைக் கல்ப காலத்திற்காக. இந்த ஞானம் வேறு யாருக்குள்ளும் கிடையாது. ஒரு தந்தைதான் ஞானம் நிறைந்தவர் ஆவார். நமக்குள் ஞானம் கிடையாது. ஒரு தந்தையையே அறிவதில்லை எனும்போது வேறு என்ன ஞானம் பிறகு இருக்கப் போகிறது? நாம் முன்னர் ஞானத்தை எடுத்துக் கொண்டிருந்தோம், எதுவும் தெரிந்திருக்கவில்லை என்பதை இப்போது நீங்கள் உணருகிறீர்கள். சிறு குழந்தைக்குள் ஞானம் இருப்பதில்லை மற்றும் எந்த அவகுணங்களும் கூட இருப்பதில்லை, ஆகையால் மகாத்மா என சொல்லப்படுகிறது ஏனெனில் தூய்மையாக இருக்கிறது. எந்த அளவு சிறு குழந்தையோ அந்த அளவு முதல் நம்பர் மலர் - முற்றிலும் கர்மாதீத (கர்மங்களை வென்ற) நிலையில் இருப்பது போல. கர்மம், விகர்மம் பற்றி எதுவும் தெரியாது. தன்னை மட்டும்தான் அறியும்.

அது மலர் போல் இருப்பதால் அனைவரையும் கவர்ந்து ஈர்க்கிறது - இப்போது பாபா கவர்ந்து ஈர்ப்பது போல. தந்தை வந்ததே குழந்தைகளாகிய உங்களை மலர்களாக ஆக்குவதற்காக. உங்களுக்குள் சிலர் மிகவும் கெட்ட முட்களும் உள்ளனர். 5 விகாரங்களின் ரூபத்தில் இருக்கும் முட்கள் அல்லவா. இந்த சமயம் உங்களுக்கு மலர்கள் மற்றும் முட்கள் பற்றிய ஞானம் உள்ளது. முட்களின் காடும் இருக்கிறது. கருவேல முள் அனைத்தையும் விட பெரிதாக இருக்கும். அந்த முட்களிலிருந்தும் கூட நிறைய பொருட்கள் உருவாகின்றன. மனிதர்கள் அதனுடன் ஒப்பிடப்படுகின்றனர். இந்த சமயத்தில் மிகவும் துக்கம் கொடுக்கக் கூடிய மனிதர்கள் முட்களாக இருக்கின்றனர், ஆகையால் இது துக்கமான உலகம் என சொல்லப்படுகிறது என தந்தைப் புரிய வைக்கிறார். தந்தை சுகத்தை வழங்கும் வள்ளல் என சொல்லவும் செய்கின்றனர். மாயா இராவணன் துக்கத்தை வழங்கும் வள்ளல். பின்னர் சத்யுகத்தில் மாயை இருப்பதில்லை எனும்போது இந்த விஷயங்கள் எதுவும் இருக்காது. நாடகத்தில் ஒரு நடிப்பு இரு முறை இருக்க முடியாது. முழு உலகில் நடிக்கக் கூடிய நடிப்பு அனைத்தும் புதிதாகும் என்பது புத்தியில் உள்ளது. நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் - சத்யுகத்தில் தொடங்கி இதுவரை உள்ள நாட்களே மாறிவிடுகின்றன, நடவடிக்கைகள் மாறிவிடு கின்றன. 5 ஆயிரம் வருடங்களின் முழு நடவடிக்கைகளினுடைய பதிவு ஆத்மாவில் நிரம்பியுள்ளது. அது மாற்றம் அடைய முடியாது. அனைத்து ஆத்மாக்களிலும் அவர்களது நடிப்பு நிரம்பியுள்ளது. இந்த ஒரு விஷயம் கூட யாரும் புரிந்து கொள்வதில்லை. இப்போது முதல்-இடை-கடைசியை நீங்கள் அறிவீர்கள். இது பள்ளிக்கூடம் அல்லவா. சிருஷ்டியின் முதல்-இடை-கடைசியை அறிய வேண்டும் மற்றும் பிறகு தந்தையை நினைவு செய்து தூய்மையடையக் கூடிய படிப்பாகும். நாம் இப்படி ஆக வேண்டும் என இவருக்கு (பிரம்மாவுக்கு) முன்பு தெரிந்திருந்ததா என்ன? தந்தை எவ்வளவு தெளிவாக்கிப் புரிய வைக்கிறார். நீ முதல் நம்பரில் இதுவாக இருந்தாய், பிறகு கீழே இறங்கி இறங்கி இப்போது என்ன ஆகிவிட்டாய். உலகைப் பாருங்கள் என்ன ஆகிவிட்டுள்ளது என. எவ்வளவு அளவற்ற மனிதர்கள் உள்ளனர். இந்த இலட்சுமி நாராயணரின் இராஜ்யத்தைப் பற்றி இருக்கப் போகிறது என சிந்தித்துப் பாருங்கள். இவர்கள் இருக்குமிடத்தில் எப்படி வைர வைடூரியங்கள் பதித்த மாளிகைகள் எல்லாம் இருக்கப் போகின்றன. இப்போது நாம் சொர்க்கவாசியாக ஆகிக் கொண்டிருக்கிறோம் என்பது புத்தியில் வருகிறது. அங்கே நாம் நமது வீடு முதலானவற்றை கட்டப் போகிறோம். சாஸ்திரங்களில் காட்டியிருப்பது போல கீழிருந்து துவாரகை வெளிவரும் என்பதல்ல. சாஸ்திரம் எனும் பெயரே நடந்து வந்துள்ளது, வேறு எந்த பெயரும் வைக்க முடியாது. மற்ற புத்தகங்கள் படிப்பிற்கானவை ஆகும். மற்றொன்று நாவல்கள் எனப்படுபவை ஆகும். மற்றபடி இவற்றை புத்தகம் அல்லது சாஸ்திரம் என சொல்கின்றனர். அவை படிப்பின் புத்தகங்கள் ஆகும். சாஸ்திரம் படிப்பவர்கள் பக்தர்கள் எனப்படுகின்றனர். பக்தி மற்றும் ஞானம் என இரண்டு பொருட்கள் உள்ளன. இப்போது வைராக்கியம் எதன் மீது? பக்தியின் மீதா அல்லது ஞானத்தின் மீதா? கண்டிப்பாக பக்தியின் மீது என சொல்வோம். இப்போது உங்களுக்கு ஞானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதன் மூலம் நீங்கள் இவ்வளவு உயர்வானவர்களாக ஆகிறீர்கள். இப்போது தந்தை உங்களை சுகம் மிக்கவர்களாக ஆக்குகிறார். சுகதாமம்தான் சொர்க்கம் எனச் சொல்லப்படுகிறது. சுகதாமத்திற்குச் செல்லப்போகிறவர்கள் நீங்கள் எனும்போது உங்களுக்குத்தான் கற்பிக்கிறார். இந்த ஞானத்தையும் கூட உங்களுடைய ஆத்மா எடுக்கிறது.

ஆத்மாவின் தர்மம் என எதுவும் கிடையாது. அது ஆத்மா ஆகும். ஆத்மா சரீரத்தில் வரும்போது சரீரத்தின் தர்மம் தனியாக இருக்கும். ஆத்மாவின் தர்மம் எது? ஒன்று ஆத்மா புள்ளி போல் இருக்கிறது, மற்றொன்று அமைதி சொரூபமாக இருக்கிறது. சாந்தி தாமம், முக்தி தாமத்தில் வசிக்கிறது. இப்போது தந்தைப் புரிய வைக்கிறார் - அனைத்து குழந்தைகளுக்கும் உரிமை உள்ளது. பிற தர்மங்கள் பலவற்றில் மாறிச் சென்றுவிட்ட குழந்தைகள் பலர் உள்ளனர். அவர்கள் பிறகு வெளியேறி தனது உண்மையான தர்மத்தில் வந்துவிடுவார்கள். தேவி தேவதா தர்மத்தை விட்டு பிற தர்மத்திற்குச் சென்ற அனைத்து இலைகளும் (குழந்தைகள்) மீண்டும் தம்முடைய இடத்திற்குத் திரும்பி வருவார்கள். இந்து தர்மத்திலிருந்து முஸ்லீமாக ஆனவர்களை ஷேக் என சொல்கின்றனர். ஷேக் முகமது என்பது போல. இந்த அனைத்து விஷயங்களையும் வேறு யாரும் புரிந்து கொள்ள முடியாது. முதன் முதலில் தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். இதில்தான் அனைவரும் குழப்பமடைந்திருக்கின்றனர். இப்போது நமக்கு கற்பிக்கின்றவர் யார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். தந்தை கற்பிக்கிறார். கிருஷ்ணர் தேகதாரி ஆவார். இவரை (பிரம்மாவை) தாதா என அழைப்போம். அனைவரும் சகோதரன்-சகோதரன் ஆக உள்ளனர் அல்லவா. பிறகு பதவியின் மீது உள்ளது. இது சகோதரனின் சரீரம், இது சகோதரியின் சரீரம். இதுவும் கூட இப்போது நீங்கள் அறிகிறீர்கள். ஆத்மாவோ ஒரு சின்னஞ்சிறு நட்சத்திரம் போன்றதாகும். இவ்வளவு ஞானம் அனைத்தும் சிறிய நட்சத்திரத்தில் இருக்கிறது. நட்சத்திரம் சரீரமின்றி பேசவும் முடியாது. நட்சத்திரங்களுக்கு நடிப்பை நடிப்பதற்காக அங்கங்களும் தேவைப்படுகிறது. நட்சத்திரங்களின் உலகமே தனியானது. பிறகு இங்கு வந்து ஆத்மா சரீரத்தை தாரணை செய்கிறது. அது ஆத்மாக்களின் வீடு. ஆத்மா சிறு புள்ளியாக உள்ளது. சரீரம் பெரிய பொருளாகும். ஆக அதனை எவ்வளவு நினைவு செய்கின்றனர். இப்போது நீங்கள் ஒரு பரமபிதா பரமாத்மாவை நினைவு செய்ய வேண்டும். ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பு நடக்கும் இந்த நினைவே சத்தியமானது. ஆத்மாக்களும் பரமாத்மாவும் வெகு காலம் பிரிந்திருந்தனர் . . . என பாடலும் உள்ளது. நாம் பாபாவைப் பிரிந்திருந்தோம் அல்லவா. எவ்வளவு காலம் பிரிந்திருந்தோம் என நினைவு வருகிறதா! கல்பம் தோறும் சொல்லி வந்த தந்தைதான் வந்து சொல்கிறார். இதில் கொஞ்சமும் வித்தியாசம் ஏற்பட முடியாது. ஒவ்வொரு வினாடியும் நடக்கக் கூடிய நடிப்பு புதுமையானது. ஒரு வினாடி கடந்து செல்கிறது, நிமிடம் கடந்து செல்கிறது, இது போல காலம் கடந்து செல்கிறது. இவ்வளவு வருடங்கள், இவ்வளவு நாட்கள், நிமிடங்கள், இவ்வளவு வினாடிகள் கடந்து வந்தோம் என சொல்லுமளவு கடந்துக் கொண்டே செல்கிறது. 5 ஆயிரம் வருடங்கள் முடிந்து போகும், பிறகு முதல் எண்ணிலிருந்து தொடங்கும். துல்லியமான கணக்கு அல்லவா. நிமிடம், வினாடி என அனைத்தையும் குறிப்பிடுகின்றனர். இவர் எப்போது பிறவி எடுத்தார்? என இப்போது யாராவது உங்களிடம் கேட்கக் கூடும். நீங்கள் எண்ணிக்கையிட்டு சொல்கிறீர்கள். கிருஷ்ணர் முதல் நம்பரில் பிறவி எடுத்தார். சிவனைப் பொறுத்தவரை நிமிடம், வினாடி என எதுவும் கணக்கு எடுக்க முடியாது. கிருஷ்ணரின் நாள், கிழமை முழுமையாக எழுதப்பட்டுள்ளது. மனிதர்களின் கடிகாரத்தில் நிமிடம், வினாடியில் வித்தியாசம் ஏற்படக் கூடும். சிவபாபாவின் அவதாரத்தில் கொஞ்சமும் வித்தியாசம் ஏற்பட முடியாது. எப்போது வந்தார் என தெரிவதும் இல்லை. காட்சி ஏற்பட்டது அப்போது வந்தார் எனவும் சொல்ல முடியாது. தோராயமாக சொல்லிவிடுகிறோம். மற்றபடி இன்ன

நேரத்தில் பிரவேசம் செய்தார் என்பது போல் அல்ல. நாம் இன்னாராக ஆகவுள்ளோம் என்ற காட்சி கிடைத்தது. நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

ஓம்சாந்தி. இனிமையிலும் இனிய ஆன்மீகக் குழந்தைகள் பாடல் கேட்டீர்கள். இனிமையிலும் இனிய, ஆன்மீகக் குழந்தைகளே என்று கூறியது யார்? அவசியம் ஆன்மீகத் தந்தை தான் கூற முடியும். இனிமையிலும் இனிய ஆன்மீகக் குழந்தைகள் இப்பொழுது எதிரில் அமர்ந்திருக்கிறீர்கள், மேலும் தந்தை மிக இனிமையாக புரிய வைத்துக் கொண்டிருக்கின்றார். அனைவருக்கும் சுகம், சாந்தி கொடுப்பவர் அல்லது அனைவரையும் இந்த துக்கத்தி-ருந்து விடுவிக்கக் கூடியவர் ஆன்மீகத் தந்தையைத் தவிர உலகில் வேறு எந்த மனிதனும் இருக்க முடியாது என்பதை இப்பொழுது நீங்கள் அறிவீர்கள். அதனால் துக்கத்தில் இருக்கும்பொழுது தந்தையை நினைவு செய்து கொண்டிருக்கின்றனர். குழந்தைகளாகிய நீங்கள் எதிரில் அமர்ந்திருக்கிறீர்கள். பாபா நம்மை சுகதாமத்திற்கு தகுதியுடையவராக ஆக்கிக் கொண்டிருக்கின்றார் என்பதை அறிவீர்கள். சதா சுகதாமத்திற்கு எஜமானர்களாக ஆக்கக் கூடிய தந்தையின் எதிரில் வந்திருக்கிறீர்கள். எதிரில் கேட்பதற்கும் தூரத்தி-ருந்து கேட்பதற்கும் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது என்பதை இப்பொழுது புரிந்திருக்கிறீர்கள். மதுவனத்தில் எதிரில் வருகிறீர்கள். மதுவனம் மிகவும் பிரபலமானது. மதுவனத்தில் அவர்கள் கிருஷ்ணரின் சித்திரத்தை காண்பித்து விட்டனர். ஆனால் கிருஷ்ணர் கிடையவே கிடையாது. இதற்கு உழைப்பு தேவை என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். தன்னை அடிக்கடி ஆத்மா என்று நிச்சயம் செய்ய வேண்டும். நான் ஆத்மா, தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைந்துக் கொண்டிருக்கிறேன். முழு சக்கரத்தில் தந்தை ஒரே ஒரு முறை தான் வருகின்றார். இது கல்பத்தின் உத்தமமான, மகிழ்ச்சிகரமான சங்கமயுகமாகும். இதற்கு புருஷோத்தமம் என்று பெயர் வைக்கப் பட்டிருக்கிறது. இந்த சங்கமயுகத்தில் தான் அனைத்து மனிதர்களும் உத்தமர்களாக ஆகின்றனர். இப்பொழுது அனைத்து மனித ஆத்மாக்களும் தமோபிரதானமாக இருக்கின்றனர், பிறகு சதோபிரதானமாக ஆவர். சதோ பிரதானமாக இருக்கின்றனர் எனில் உத்தமமானவர்கள். தமோபிரதானம் ஆன காரணத்தினால் கீழானவர்களாக ஆகிவிடுகின்றனர். ஆக இப்பொழுது தந்தை ஆத்மாக்களுக்கு எதிரில் அமர்ந்து புரிய வைக்கின்றார். முழு நடிப்பும் ஆத்மா தான் நடிக்கிறதே தவிர சரீரம் அல்ல. நான் ஆத்மா, உண்மையில் நிராகார உலகில் அல்லது சாந்திதாமத்தில் இருக்கக் கூடியவன் என்பது உங்களது புத்தியில் வந்துவிட்டது. இது யாருக்கும் தெரியாது. யாருக்கும் புரிய வைக்கவும் முடியாது. இப்பொழுது உங்களது புத்தியின் பூட்டு திறக்கப்பட்டுவிட்டது. உண்மையில் ஆத்மாக்கள் பரந்தாமத்தில் இருக்கக் கூடியவை என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். அது நிராகார உலகமாகும். இது பௌதீக உலகமாகும். இங்கு ஆத்மாக்களாகிய நாம் அனைவரும் நடிகர்களாக இருக்கிறோம். முதன் முத-ல் நாம் நடிக்க வந்தோம். அதற்குப் பிறகு தான் வரிசைக்கிரமமாக வந்துக் கொண்டே இருக்கின்றனர். அனைத்து

நடிகர்களும் ஒன்றாக சேர்ந்து வந்துவிடமாட்டார்கள். வித விதமான நடிகர்கள் வந்து கொண்டே இருக்கின்றனர். எப்பொழுது நாடகம் முடிவடைகிறதோ அப்பொழுது அனைவரும் ஒன்று சேர்ந்துவிடுவர். இப்பொழுது உங்களுக்கு அறிமுகம் கிடைத்திருக்கிறது, ஆத்மாக்களாகிய நாம் உண்மையில் சாந்திதாமத்தில் வசிக்கக் கூடியவர்கள். இங்கு நடிப்பதற்கு வருகிறோம். தந்தை முழு நேரமும் நடிப்பு நடிக்க வருவது கிடையாது. நாம் தான் நடிப்பு நடித்து நடித்து சதோபிரதானத்தி-ருந்து தமோ பிரதானமாக ஆகிவிடுகிறோம். இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் எதிரில் கேட்கும்பொழுது மிகுந்த போதை ஏற்படுகிறது. இந்த அளவு போதை முரளி படிக்கும் பொழுது ஏற்படுவது கிடையாது. இங்கு எதிரில் இருக்கிறீர்கள் அல்லவா!

பாரதம் தேவி தேவதைகளின் இருப்பிடமாக இருந்தது என்பதை குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொண்டீர்கள். இப்பொழுது கிடையாது. சிலைகளைப் பார்க்கிறீர்கள், நிச்சயமாக இருந்தனர். நாம் அங்கு வசிக்கக் கூடியவர்களாக இருந்தோம், முதன்முத-ல் நாம் தேவதைகளாக இருந்தோம், தனது பாகத்தை நினைவு செய்வீர்களா அல்லது மறந்துவிடுவீர்களா? நீங்கள் இங்கு இந்த நடிப்பு நடித்திருக்கிறீர்கள் என்று தந்தை கூறுகின்றார். இது நாடகமாகும். புது உலகம் பிறகு அவசியம் பழைய உலகமாக ஆகிறது. முதன்முத-ல் மே-ருந்து எந்த ஆத்மாக்கள் வந்தாலும் அவர்கள் தங்கயுகத்திற்கு வருகின்றனர். இந்த அனைத்து விஷயங்களும் இப்பொழுது உங்களது புத்தியில் இருக்கிறது. நீங்கள் உலகிற்கு மகாராஜா, மகாராணியாக இருந்தீர்கள். உங்களது இராஜ்யம் இருந்தது. இப்பொழுது இராஜ்யம் கிடையாது. நாம் எப்படி இராஜ்யம் செய்வது? என்பதை இப்பொழுது நீங்கள் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அங்கு அமைச்சர்கள் இருக்கமாட்டார்கள். ஆலோசனை கூற வேண்டிய அவசியம் கிடையாது. அவர்கள் ஸ்ரீமத் மூலம் சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமான வர்களாக ஆகிவிடுகின்றனர். பிறகு இவர்கள் யாரிடத்திலும் ஆலோசனை பெற வேண்டிய அவசியம் கிடையாது. ஒருவேளை யாரிடத்திலாவது ஆலோசனை பெறுகின்றீர்கள் எனில் உங்களது புத்தி பலவீனமாக இருக்கிறது என்பதைப் புரிந்துக் கொள்ளுங்கள். இப்பொழுது என்ன ஸ்ரீமத் கிடைக்கிறதோ, அது சத்யுகத்திலும் நிலைத் திருக்கும். முதன்முத-ல், அரைக்கல்பம் இந்த தேவி தேவதைகளின் இராஜ்யம் இருந்தது என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்துக் கொண்டீர்கள். இப்பொழுது உங்களது ஆத்மா புத்துணர்வு அடைந்து கொண்டிருக்கிறது. இந்த ஞானம் பரமாத்மாவைத் தவிர வேறு எந்த ஆத்மாவும் கொடுக்க முடியாது.

இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் ஆத்ம அபிமானிகளாக ஆக வேண்டும். சாந்திதாமத்தி-ருந்து இங்கு வந்து பேசக் கூடியவர்களாக ஆகிவிட்டீர்கள். பேசாமல் காரியம் செய்ய முடியாது. இது மிகவும் புரிந்துக் கொள்ள வேண்டிய விஷயமாகும். எவ்வாறு தந்தையிடம் முழு ஞானமும் இருக்கிறதோ அதே போன்று உங்களது ஆத்மாவிலும் ஞானம் இருக்கிறது. நாம் ஒரு சரீரத்தை விடுத்து வினைப்படி மற்றொரு சரீரத்தை எடுத்துக் கொள்கிறோம் என்று ஆத்மா கூறுகிறது. அவசியம் மறுபிறப்பும் இருக்கிறது. ஆத்மாவிற்கு என்ன பாகம் கிடைத்திருக்கிறதோ அதை நடித்துக் கொண்டேயிருக்கிறது. வினையின் பலனைப் பொருத்து மறுபிறப்பு எடுத்துக் கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் ஆத்மாவின் தூய்மைக்கான அளவு குறைந்துக் கொண்டே செல்கிறது.

தூய்மையின்மை என்ற வார்த்தை துவாபர யுகத்தி-ருந்து தான் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் சிறிதளவாவது வித்தியாசம் அவசியம் இருக்கவே செய்யும். நீங்கள் புது கட்டடம் கட்டுகிறீர்கள், ஒரு மாதத்திற்குப் பிறகு அவசியம் வித்தியாசம் இருக்கவே செய்யும். பாபா நமக்கு ஆஸ்தி கொடுத்துக் கொண்டிருக்கின்றார் என்பதை இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துக் கொள்கிறீர்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு ஆஸ்தி கொடுப்பதற்காகவே நான் வந்திருக்கிறேன் என்று தந்தை கூறுகின்றார். யார், எந்த அளவிற்கு முயற்சி செய்கிறீர்களோ அந்த அளவிற்குப் பதவி அடைவீர்கள். தந்தையிடத்தில் எந்த வேறுபாடும் கிடையாது. நான் ஆத்மாக்களுக்கு கற்பிக்கிறேன் என்பதை தந்தை அறிவார். தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைவதற்கு ஆத்மாவிற்கு உரிமை இருக்கிறது. இதற்கு ஆண், பெண் என்ற பார்வை இங்கு இருப்பது கிடையாது. நீங்கள் அனைவரும் குழந்தைகள். தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைந்துக் கொண்டிருக்கிறீர்கள். அனைத்து ஆத்மாக்களும் சகோதரர் களாக இருக்கிறீர்கள், உங்களுக்குத் தான் தந்தை கற்பிக்கின்றார், ஆஸ்தி கொடுக்கின்றார். தந்தை தான் ஆன்மீகக் குழந்தைகளிடம் உரையாடல் செய்கின்றார் - ஹே, செல்லமான, இனிய, அன்பான குழந்தைகளே! நீங்கள் அதிக காலம் நடிப்பு நடித்து நடித்து இப்பொழுது மீண்டும் தங்களது ஆஸ்தியை பெறுவதற்காக வந்து சந்தித்து இருக்கிறீர்கள். இதுவும் நாடகத்தில் பதிவாகியிருக்கிறது. சரீரம் மாறிக் கொண்டேயிருக்கிறது. மற்றபடி ஆத்மாவானது தூய்மையி-ருந்து அசுத்தமாக ஆகிறது. தூய்மை இன்றி ஆகிறது, சத்யுகத்தில் தூய்மையாக இருக்கிறது. இது தூய்மை இல்லாத உலகம் என்று கூறப்படுகிறது. தேவதைகளின் இராஜ்யம் இருந்தபொழுது விகாரமற்ற உலகமாக இருந்தது. இப்பொழுது கிடையாது. இது விளையாட்டு அல்லவா! புது உலகம் பழையதாகவும், பழையது மீண்டும் புதிய உலகமாகவும் ஆகிறது. இப்பொழுது சுகதாமம் ஸ்தாபனை ஆகிறது. மற்ற அனைத்து ஆத்மாக்களும் முக்திதாமத்தில் இருப்பர். இப்பொழுது இந்த எல்லையற்ற நாடகம் முடிவடையும் நிலைக்கு வந்துவிட்டது. அனைத்து ஆத்மாக்களும் கொசுக் கூட்டம் போன்று செல்வார்கள். இந்த நேரத்தில் எந்த ஆத்மா வந்தாலும் தூய்மை இல்லாத உலகில் தான் பிறவி எடுக்கிறது, அதற்கு என்ன மதிப்பு இருக்கும்? யார் முதன்முத-ல் புது உலகில் வருகிறார்களோ அவர்கள் தான் மதிப்பு வாய்ந்தவர்கள். எது புது உலகமாக இருந்ததோ அது பழையதாக ஆகிவிட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். புது உலகில் நாம் தேவி தேவதைகள் இருந்தோம். அங்கு துக்கத்தின் பெயர் கிடையாது. இங்கு அளவற்ற துக்கம் இருக்கிறது. தந்தை வந்து துக்கமான உலகிருந்து விடுவிக்கின்றார். இந்த பழைய உலகம் அவசியம் மாற வேண்டும். உண்மையில் நாம் சத்யுகத்திற்கு எஜமானர்களாக இருந்தோம், பிறகு 84 பிறவிகளுக்குப் பிறகு இவ்வாறு ஆகிவிட்டோம் என்பதை நீங்கள் புரிந்துக் கொண்டீர்கள். இப்பொழுது மீண்டும் தந்தை கூறுகின்றார் - என்னை நினைவு செய்தால் நீங்கள் சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆவீர்கள். அப்படியானால் நாம் ஏன் ஆத்மா என்று நிச்சயம் செய்து தந்தையை நினைவு செய்யக் கூடாது? சிறிதளவாவது முயற்சி செய்ய வேண்டும் அல்லவா! இராஜ்யம் அடைவது எளிது கிடையாது. தந்தையை நினைவு செய்ய வேண்டும். அடிக்கடி உங்களை மறக்க வைப்பது மாயையின் அதிசயமாகும். மீள்வதற்கு உபாயம் உருவாக்க வேண்டும். என்னுடையவராக ஆகிவிட்டதால் நினைவு நிலைத்து விடும் என்று நினைக்காதீர்கள். இப்படி நினைப்பவர்கள் என்ன முயற்சி செய்வர்? எதுவரை வாழ்வீர்களோ அதுவரை

முயற்சி செய்ய வேண்டும். ஞான அமிர்தம் பருகிக் கொண்டே இருக்க வேண்டும். இது நமது கடைசிப் பிறவி என்பதையும் புரிந்து கொண்டீர்கள். இந்த சரீர உணர்வை விடுத்து ஆத்ம அபிமானியாக ஆக வேண்டும். குடும்ப விவகாரத்திலும் இருக்க வேண்டும். அவசியம் முயற்சி செய்ய வேண்டும். தன்னை ஆத்மா என்று நிச்சயம் செய்து தந்தையை நினைவு செய்தால் போதும். நீங்கள் தான் தாயாக, தந்தையாக ...... இவை அனைத்தும் பக்தி மார்க்கத்தில் செய்யும் மகிமையாகும். நீங்கள் ஒரே ஒரு தந்தையை மட்டுமே நினைவு செய்ய வேண்டும். ஒருவர் மட்டுமே இனிமையானவர் (சாக்ரீன்) தந்தை ஆவார். மற்ற அனைத்து விஷயங்களையும் விட்டு விட்டு ஒரு இனிமையானவரை நினைவு செய்யுங்கள். இப்பொழுது உங்களது ஆத்மாவானது தமோபிரதானமாக ஆகிவிட்டது, அதை சதோபிரதானமாக ஆக்குவதற்கு நினைவு யாத்திரையில் இருங்கள். தந்தையிடமிருந்து சுகத்தின் ஆஸ்தியை எடுத்துக் கொள்ளுங்கள் என்று அனைவருக்கும் கூறுங்கள். சுகம் சத்யுகத்தில் தான் இருக்கும். சுகதாமத்தை ஸ்தாபனை செய்யக் கூடியவர் பாபா ஆவார். தந்தையை நினைவு செய்வது மிகவும் எளிதாகும். ஆனால் மாயையின் எதிர்ப்பு அதிகமாக இருக்கிறது. ஆகையால் முயற்சி செய்து தந்தையை நினைவு செய்தால் கறை நீங்கிவிடும். விநாடியில் ஜீவன்முக்தி என்று பாடப்பட்டிருக்கிறது. ஆத்மாவாகிய நாம் ஆன்மீகத் தந்தையின் குழந்தைகள். அங்கு வசிக்கக் கூடியவர்கள். பிறகு நாம் நமது பாகத்தை மீண்டும் நடிக்க வேண்டும். இந்த நாடகத்தில் அனைவரையும் விட அதிகமான பாகம் நம்முடையது ஆகும். அதிக சுகமும் நமக்குத் தான் கிடைக்கும். உங்களது தேவி தேவதா தர்மம் மிகுந்த சுகம் கொடுக்கக் கூடியது என்று தந்தை கூறுகின்றார். மற்ற அனைவரும் கணக்கு வழக்குகளை முடித்துக் கொண்டு தானாகவே சாந்திதாமத்திற்கு சென்றுவிடுவர். அதிகப்படியான சிந்தனை நாம் ஏன் செல்ல வேண்டும்? அனைவரையும் திரும்பி அழைத்துச் செல்ல தந்தை வந்திருக்கின்றார். கொசுக்களைப் போன்று அனைவரையும் அழைத்துச் செல்வார். சத்யுகத்தில் மிகக் குறைவானவர்கள் இருப்பர். இவை அனைத்தும் நாடகத்தில் பதிவாகியிருக்கிறது. சரீரம் அழிந்துப் போய்விடும். அழிவற்ற ஆத்மாவானது கணக்கு வழக்குகளை முடித்துக் கொண்டு சென்றுவிடும். நெருப்பில் இடுவதன் மூலம் ஆத்மா தூய்மையாகிவிடும் என்பது கிடையாது. நினைவு என்ற யோக அக்னியின் மூலம் தான் ஆத்மா தூய்மை ஆகும். இது யோக அக்னியாகும். சீதை நெருப்பின் சிதையில் ஏறினாள் என்று இதையே அவர்கள் நாடகமாக உருவாக்கிவிட்டனர். நெருப்பின் மூலம் யாரும் தூய்மை ஆகிவிட முடியாது. சீதைகளாகிய நீங்கள் அனைவரும் இந்த நேரத்தில் தூய்மையின்றி இருக்கிறீர்கள் என்று தந்தை புரிய வைக்கின்றார். இராவண இராஜ்யத்தில் இருக்கிறீர்கள். இப்பொழுது ஒரு தந்தையின் நினைவின் மூலம் நீங்கள் தூய்மை ஆக வேண்டும். இராமர் ஒரே ஒருவர் ஆவார். அக்னி என்ற வார்த்தை கேட்டதும் அக்னியி-ருந்து வெளியேறியதாக நினைக்கின்றனர். யோக அக்னி எங்கு இருக்கிறது! இந்த அக்னி எங்கு இருக்கிறது! ஆத்மா பரம்பிதா பரமாத்மாவிடம் (யோகா) நினைவின் தொடர்பு வைத்துக் கொள்வதன் மூலம் தூய்மை இல்லாததி-ருந்து தூய்மையாக ஆகிறது. இரவு பகல் வித்தியாசம் இருக்கிறது. நரகத்தில் அனைத்து சீதைகளும் இராவணனின் சிறையில் சோக வனத்தில் இருக்கின்றனர். இங்கிருக்கும் சுகம் காக்கை எச்சத்திற்கு சமம் ஆகும். வித்தியாசம் காண்பிக்கப் படுகிறது. சொர்க்கத்தின் சுகம் அளவற்றது ஆகும்.

ஆத்மாக்களாகிய உங்களுக்கு இப்பொழுது நாயகனாகிய சிவனுடன் நிச்சயதார்த்தம் எற்பட்டிருக்கிறது. ஆக ஆத்மா பெண் ஆகிவிடுகிறது அல்லவா! என் ஒருவனை நினைவு செய்தால் நீங்கள் தூய்மை ஆகிவிடுவீர்கள் என்ற சிவபாபா கூறுகின்றார். சாந்திதாமத்திற்கு சென்று பிறகு சுகதாமத்திற்கு வந்துவிடுவீர்கள். ஆக குழந்தைகள் ஞான இரத்தினங்களினால் பையை (புத்தியை) நிறைத்துக் கொள்ள வேண்டும். எந்த வகையான சந்தேகமும் கொண்டு வரக் கூடாது. தேக அபிமானத்தில் வருவதன் மூலம் பல வகையான கேள்விகள் எழுகின்றன. பிறகு தந்தை என்ன தொழில் கூறியிருக்கிறாரோ அதை செய்வது கிடையாது. மூல விஷயம் நாம் தூய்மை இல்லாததி-ருந்து தூய்மை ஆக வேண்டும். மற்ற விஷயங்களை விட்டு விட வேண்டும். இராஜ்யத்திற்கான பழக்க வழக்கங்கள் என்னவோ அது (இயல்பாகவே) நடைபெறும். எவ்வாறு மாளிகை கட்ட வேண்டுமோ அவ்வாறு கட்டுவீர்கள்! தூய்மை ஆவது தான் மூல விசயமாகும். ஹே பதீத பாவனனே ...... என்று தான் அழைக்கிறீர்கள். தூய்மை ஆவதன் மூலம் சுகமானவர்களாக ஆகிவிடுகிறீர்கள். அனைவரையும் விட தூய்மையானவர்கள் தேவி தேவதைகள் ஆவர்.

இப்பொழுது நீங்கள் 21 பிறவிகளுக்கு அனைத்திலும் (உத்தமமான) மேலான தூய்மையானவர்களாக ஆகிறீர்கள். அவர்கள் தான் சம்பூர்ண நிர்விகாரிகள், தூய்மையானவர்கள் என்று கூறப்படுகின்றனர். ஆக தந்தை என்ன ஸ்ரீமத் கொடுக்கிறாரோ அதன்படி நடக்க வேண்டும். எந்த சங்கல்பமும் எழுப்ப வேண்டிய அவசியமில்லை. முத-ல் நாம் தூய்மையற்றதி-ருந்து தூய்மை ஆக வேண்டும். ஹே பதீத பாவன் ..... என்று அழைக்கிறீர்கள். ஆனால் புரிந்துக் கொள்வது கிடையாது. பதீத பாவன் யார்? என்பதையும் அறியவில்லை. இது தூய்மையில்லாத உலகம், அது தூய்மையான உலகம். முக்கிய விஷயம் தூய்மை ஆவதாகும். தூய்மை ஆக்குவது யார்? என்று எதுவும் தெரியாது. பதீத பாவனன் என்று அழைக்கின்றனர், ஆனால் நீங்கள் தூய்மை யில்லாதவர்கள் என்று கூறினால் கோபப்படுகின்றனர். தன்னை விகாரி என்று யாரும் புரிந்து கொள்வது கிடையாது. அனைவரும் இல்லறவாசிகளாகத் தான் இருந்தனர் என்று கூறுகின்றனர். இராதை கிருஷ்ணர், இலட்சுமி நாராயணன் போன்றவர்களுக்கும் குழந்தைகள் இருந்தனர் அல்லவா! அங்கு யோக பலத்தின் மூலம் குழந்தைகள் பிறந்தனர் என்பதை மறந்துவிட்டனர். அது விகாரமற்ற உலகம், சொர்க்கம் என்று கூறப்படுகிறது. அது சிவாலயமாகும். தூய்மையற்ற உலகில் ஒருவர் கூட தூய்மையாக கிடையாது என்று தந்தை கூறுகின்றார். இந்த தந்தை தந்தையாக, ஆசிரியராக, சத்குருவாக இருந்து அனைவருக்கும் சத்கதி கொடுக்கின்றார். அங்கு அந்த (க-யுக) குரு சென்றுவிட்டால் பிறகு அவரது குழந்தைக்கு சிம்மாசனம் கொடுத்துவிடுகின்றனர். பிறகு அவர் எப்படி சத்கதிக்கு அழைத்துச் செல்வார்? அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் ஒரே ஒருவர் ஆவார். சத்யுகத்தில் தேவி தேவதைகள் மட்டுமே இருப்பர். மற்றபடி இவ்வளவு ஆத்மாக்களும் சாந்திதாமத்திற்கு சென்றுவிடுவர். இராவண இராஜ்யத்தி-ருந்து விடுபட்டுவிடுவர். தந்தை அனைவரையும் தூய்மையாக்கி அழைத்துச் செல்கிறார். பிறகு தூய்மையான நிலையி-ருந்து யாரும் உடனேயே தூய்மையை இழப்பது கிடையாது. வரிசைக் கிரமமாக இறங்குகின்றனர், சதோபிரதானத்தி-ருந்து சதோ, ரஜோ, தமோ ...... உங்களது புத்தியில் 84 பிறவிச் சக்கரம் இருக்கிறது. நீங்கள் இப்பொழுது கலங்கரை விளக்காக இருக்கிறீர்கள். இந்த சக்கரம் எவ்வாறு சுற்றுகிறது? என்பதை ஞானத்தின் மூலம் அறிந்துக்

கொண்டீர்கள். இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் மற்ற அனைவருக்கும் வழி கூற வேண்டும். அனைவரும் படகுகளாக இருக்கின்றனர், நீங்கள் மாலுமியாக இருந்து வழி கூறக் கூடியவர்கள். நீங்கள் சாந்திதாமம், சுகதாமத்தை நினைவு செய்யுங்கள் என்று அனைவருக்கும் கூறுங்கள். க-யுக துக்கதாமத்தை மறந்துவிடுங்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீக குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

ஓம் சாந்தி. குழந்தைகள் முதல்-முதலில் ஒரு கருத்தைப் புரிந்துக் கொள்ள வேண்டும், நாம் அனைவரும் சகோதர-சகோதரர்கள் மற்றும் அவர் அனைவருக்கும் தந்தையாவார். அவரை சர்வசக்திவான் என்று சொல்லப்படுகிறது. உங்களிடத்தில் சர்வசக்திகளும் இருந்தன. நீங்கள் உலகத்தின் மீது இராஜ்யம் செய்தீர்கள். பாரதத்தில் தான் இந்த தேவி-தேவதைகளின் இராஜ்யம் இருந்தது. சொல்லப்போனால் குழந்தைகளாகிய உங்களுடைய இராஜ்யம் இருந்தது. நீங்கள் தூய்மையான தேவி-தேவதைகளாக இருந்தீர்கள், உங்களுடைய குலம் அல்லது இராஜ வம்சம் அதாவது பரம்பரையைச் சேர்ந்த அவர்கள் அனைவரும் நிர்விகாரிகளாக இருந்தார்கள். யார் நிர்விகாரிகளாக இருந்தது? ஆத்மாக்கள். இப்போது நீங்கள் நிர்விகாரிகளாக ஆகிக் கொண்டிருக் கிறீர்கள். சர்வசக்திவான் தந்தையை நினைவு செய்து அவரிடமிருந்து சக்தியை அடைந்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆத்மா தான் 84 பிறவிகளின் நடிப்பை நடிக்கிறது என்று பாபா புரிய வைத்துள்ளார். ஆத்மாவில் இருந்த சதோபிரதான சக்தி பிறகு நாளுக்கு - நாள் குறைந்துக் கொண்டே செல்கிறது. சதோபிரதானத்திலிருந்து தமோபிர தானமாக (நாடகப்படி) ஆக வேண்டும். எப்படி பேட்டரியின் சக்தி குறைந்துக் கொண்டே செல்கிறது என்றால் மோட்டார் நின்றுவிடுகிறது. பேட்டரியில் சக்தி இறங்கிவிடுகிறது. ஆத்மாவின் பேட்டரி முழுவதுமாக காலியாகி விடுவதில்லை, ஏதோ ஓரளவு கொஞ்சம் சக்தி இருக்கிறது. யாராவது இறக்கிறார்கள் என்றால் தீபம் ஏற்றுகிறார்கள், தீபம் அணைந்து விடக்கூடாது என்பதற்காக எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருக்கிறார்கள். பேட்டரியின் சக்தி குறைந்துவிடுகிறது என்றால் பிறகு சார்ஜ் செய்வதற்கு வைக்கிறார்கள். உங்களுடைய ஆத்மா சர்வசக்திவானாக இருந்தது, என்பதை குழந்தைகளாகிய நீங்கள் இப்போது புரிந்துக் கொள்கிறீர்கள், இப்போது மீண்டும் நீங்கள் சர்வசக்திவான் பாபாவிடம் தங்களுடைய புத்தியோகத்தை ஈடுபடுத்துகிறீர்கள். பாபாவிடமுள்ள சக்தி நம்மிடத்தில் வந்துவிடட்டும் என்று நினைவு செய்கிறீர்கள் ஏனென்றால் சக்தி குறைந்துவிட்டது. கண்டிப்பாக கொஞ்சம் இருக்கிறது. ஒரேயடியாக காலியாகிவிட்டால் பிறகு சரீரமே இருக்காது. ஆத்மா தந்தையை நினைவு செய்து-செய்து முற்றிலும் தூய்மையாக ஆகிவிடுகிறது. சத்யுகத்தில் உங்களுடைய பேட்டரி முழுமையாக சக்தி நிறைந்திருக்கிறது, பிறகு கொஞ்சம்-கொஞ்சமாக குறைந்துக் கொண்டே செல்கிறது. திரேதாயுகம் வரை மீட்டர் (அளவு) குறைகிறது, இதனை கலை என்று சொல்லப்படுகிறது. சதோபிரதானமாக இருந்த ஆத்மா சதோ நிலையை அடைந்தது, சக்தி குறைந்துவிடுகிறது என்று சொல்லலாம். நாம் சத்யுகத்தில் மனிதனிலிருந்து

தேவதைகளாக ஆகிவிடுகிறோம் என்று நீங்கள் புரிந்துக் கொள்கிறீர்கள். என்னை நினைவு செய்தீர்கள் என்றால் நீங்கள் தமோபிரதானத்திலிருந்து சதோபிரதானமாக ஆகிவிடுவீர்கள் என்று இப்போது பாபா கூறுகின்றார். இப்போது நீங்கள் தமோபிரதானமாக ஆகிவிட்டீர்கள், எனவே சக்தி திவாலாகி (இழந்து) விட்டது. பிறகு பாபாவை நினைவு செய்வதின் மூலம் முழு சக்தியும் வரும், ஏனென்றால் தேகம் உட்பட தேகத்தின் சம்மந்தங்கள் என்னவெல்லாம் இருக்கின்றனவோ, அவை அனைத்தும் அழியப்போகிறது பிறகு உங்களுக்கு எல்லையற்ற இராஜ்யம் கிடைக்கிறது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். பாபாவும் எல்லையற்றவர் என்றால் ஆஸ்தியையும் எல்லையற்றதாக கொடுக்கின்றார். நீங்கள் இப்போது தூய்மையற்றவர்களாக இருக்கிறீர்கள், உங்களுடைய சக்தி முற்றிலும் குறைந்துவிட்டது. ஹே குழந்தைகளே - இப்போது நீங்கள் என்னை நினைவு செய்யுங்கள், நான் சர்வசக்திவானாக இருக்கின்றேன், என் மூலம் சர்வ வல்லமையுடைய இராஜ்யம் கிடைக்கிறது. சத்யுகத்தில் தேவி-தேவதைகள் முழு உலகத்திற்கும் எஜமானர்களாக இருந்தார்கள், தூய்மையாக இருந்தார்கள், தெய்வீக குணமுடையவர்களாக இருந்தார்கள். இப்போது அந்த தெய்வீக குணம் இல்லை. அனைவருடைய பேட்டரியும் முழுமையாக இறங்க ஆரம்பித்துவிட்டது. இப்போது மீண்டும் பேட்டரி நிரம்புகிறது. பரமபிதா பரமாத்மாவோடு யோகம் ஈடுபடுத்தாமல் பேட்டரி முழுமையாக நிரம்ப முடியாது. அந்த தந்தை எப்போதும் தூய்மையானவராக இருக்கின்றார். இங்கே அனைவரும் தூய்மையற்றவர்களாக இருக்கிறார்கள். தூய்மையாக இருந்தபோது பேட்டரி நிரம்பி இருக்கிறது. எனவே பாபா இப்போது புரிய வைக்கின்றார், ஒருவரை மட்டுமே நினைவு செய்ய வேண்டும். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான் ஆவார். மற்ற அனைத்தும் படைப்புகளாகும். படைப்பிடமிருந்து படைப்புக்கு ஒருபோதும் ஆஸ்தி கிடைப்பதில்லை. படைப்பவர் ஒருவரே ஆவார். அவர் எல்லைக்கப்பாற்பட்ட தந்தையாவார். மற்றவர்கள் அனைவரும் எல்லைக்குட்பட்டவர்களாவர். எல்லையற்ற தந்தையை நினைவு செய்வதின் மூலம் எல்லையற்ற இராஜ்யம் கிடைக்கிறது. எனவே நமக்காக பாபா புதிய உலகம், சொர்க்கத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறார் என்பதை உள்ளுக்குள் புரிந்துக் கொள்ள வேண்டும். நாடகத்தின் திட்டப்படி சொர்க்கத்தின் ஸ்தாபனை நடந்து கொண்டிருக்கிறது. சத்யுகம் வரப்போகிறது என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். சத்யுகத்தில் எப்போதும் சுகமே இருக்கிறது. அது எப்படி கிடைக்கிறது? என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் என்று பாபா அமர்ந்துப் புரிய வைக்கின்றார். நான் எப்போதும் தூய்மையாக இருக்கின்றேன். நான் ஒருபோதும் மனித உடலை எடுப்பதில்லை. தேவதை உடலையோ, மனித உடலையோ எடுப்பதில்லை அதாவது நான் பிறப்பு-இறப்பில் வருவதில்லை. குழந்தைகளாகிய உங்களுக்கு சொர்க்கத்தின் இராஜ்யத்தை கொடுப்பதற்காகவே, எப்போது இந்த பிரம்மாவிற்கு 60 வருட வானப்பிரஸ்த நிலையில் இருக்கிறாரோ அப்போது இவருடைய உடலில் நான் வருகின்றேன். இவர் தான் முழுமையாக சதோபிரதானத்திலிருந்து தமோபிரதானமாக ஆகியுள்ளார். நம்பர் ஒன் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான் பிறகு சூட்சுமவதனவாசிகளான பிரம்மா- விஷ்ணு-சங்கர், அதனுடைய காட்சி ஏற்படுகிறது. சூட்சுமவதனம் இடையில் (நடுவில்) இருக்கிறது அல்லவா. அங்கே சரீரம் இருக்க முடியாது. சூட்சும சரீரத்தை திவ்ய திருஷ்டியின் மூலம் மட்டுமே காண முடியும். மனித உலகம் இங்கே இருக்கிறது. மற்றபடி சாட்சாத்காரத்

திற்காக மட்டும் ஃபரிஸ்தாக்கள் இருக்கிறார்கள். கடைசியில் குழந்தைகளாகிய நீங்கள் முற்றிலும் தூய்மையாக ஆகிவிடுகிறீர்கள் எனும்போது உங்களுடைய காட்சி கூட ஏற்படுகிறது. அப்படிப்பட்ட ஃபரிஸ்தாக்களாக ஆகி பிறகு சத்யுகத்தில் இங்கே தான் வந்து சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆவீர்கள். இந்த பிரம்மா ஒன்றும் விஷ்ணுவை நினைவு செய்வதில்லை. இவரும் சிவபாபாவை நினைவு செய்கிறார் பிறகு இவர் விஷ்ணுவாக ஆகின்றார். இவர் இராஜ்யத்தை எப்படி அடைந்தார் என்பதைப் புரிந்துக் கொள்ள வேண்டும் அல்லவா. சண்டை போன்ற எதுவும் நடப்பதில்லை. தேவதைகள் எப்படி ஹிம்சை செய்வார்கள்!

குழந்தைகளாகிய நீங்கள் இப்போது பாபாவை நினைவு செய்து இராஜ்யத்தை அடைகிறீர்கள். யார் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் சரி. ஹே குழந்தைகளே, தேகம் உட்பட தேகத்தின் அனைத்து தர்மங்களையும் விட்டு விட்டு என்னை மட்டும் நினைவு செய்யுங்கள், என்று கீதையில் கூட இருக்கிறது. பற்று வைக்க அவருக்கு தேகம் இல்லை. நான் கொஞ்ச காலத்திற்கு இவருடைய சரீரத்தை கடனாகப் பெறுகின்றேன் என்று கூறுகின்றார். இல்லையென்றால் நான் எப்படி ஞானத்தை வழங்க முடியும். நான் விதையாக இருக்கின்றேன் அல்லவா. இந்த முழு மரத்தின் ஞானமும் என்னிடத்தில் இருக்கிறது. சிருஷ்டியின் ஆயுள் எவ்வளவு என்பது வேறு யாருக்கும் தெரியாது? இந்த சிருஷ்டியின் ஸ்தாபனை, வளர்ப்பு, மற்றும் வினாசம் எப்படி நடக்கிறது? மனிதர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். மனிதர்கள் தான் படிக்கிறார்கள். விலங்குகள் படிக்காது அல்லவா. அவர்கள் எல்லைக்குட்பட்ட படிப்பை படிக்கிறார்கள். பாபா உங்களுக்கு எல்லைக்கப்பாற்பட்ட படிப்பை படிப்பிக்கின்றார் அதன்மூலம் உங்களை எல்லையற்ற எஜமானர்களாக ஆக்குகின்றார். எனவே பகவான் என்று எந்த மனிதனையோ அல்லது தேகதாரியையோ சொல்லப்படுவதில்லை என்றுப் புரிய வைக்க வேண்டும். பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கு கூட சூட்சும தேகம் இருக்கிறது அல்லவா. இவர்களுடைய பெயரே தனியாகும். இவர்களை பகவான் என்று சொல்லப்படுவதில்லை. இந்த சரீரம் இந்த தாதாவின் ஆத்மாவின் சிம்மாசனமாக இருந்தது. அழிவற்ற சிம்மாசனமல்லவா. இப்போது இது அழிவற்ற மூர்த்தியான பாபாவின் சிம்மாசனமாக இருக்கிறது. அமிர்தசரசில் கூட ஒரு அழிவற்ற சிம்மாசனம் (அகால் தக்த்) இருக்கிறது அல்லவா. பெரிய-பெரியவர்கள் சென்று அந்த அழிவற்ற சிம்மாசனத்தில் சென்று அமருகிறார்கள். இப்போது பாபா புரிய வைக்கின்றார், இவையனைத்தும் அழிவற்ற ஆத்மாக்களின் சிம்மாசனமாகும். ஆத்மா அழிவற்றது, அதை ஒருபோதும் காலன் அழிக்க முடியாது. மற்றபடி சிம்மாசனம் மாறிக் கொண்டேயிருக்கிறது. அழிவற்ற மூர்த்தி ஆத்மா இந்த சிம்மாசனத்தில் அமருகிறது. முதலில் சிறிய சிம்மாசனமாக இருக்கிறது பிறகு பெரியதாக்கிக் கொண்டே செல்கிறது. ஆத்மா ஒரு சரீரத்தை விட்டு விட்டு வேறொன்றை எடுக்கிறது. ஆத்மா அழிவற்றதாகும். மற்றபடி அதில் நல்ல அல்லது கெட்ட சம்ஸ்காரங்கள் இருக்கின்றது, ஆகையினால் தான் இது கர்மங்களின் பலன் என்று சொல்லப்படுகிறது. ஆத்மா ஒருபோதும் அழிவதில்லை. ஆத்மாவின் தந்தை ஒருவரே. இதை புரிந்துக் கொள்ள வேண்டும் அல்லவா. இந்த பாபா ஏதாவது சாஸ்திரங்களின் விஷயத்தை சொல்கிறாரா என்ன! சாஸ்திரங்கள் போன்றவற்றை படிப்பதின் மூலம் யாரும் திரும்பிச் செல்ல முடியாது.

கடைசியில் அனைவரும் திரும்பிச் செல்வார்கள். எப்படி தேனீக்கள் அல்லது வெட்டுக்கிளி கூட்டம் செல்கின்றன அல்லவா. தேனீக்களின் ராணி கூட இருக்கிறது. அதற்கு பின்னால் அனைத்தும் செல்கின்றன. பாபாவும் செல்கிறார் என்றால் அவருக்குப் பின்னால் அனைத்து ஆத்மாக்களும் செல்லும். அங்கே மூலவதனத்தில் அனைத்து ஆத்மாக்களின் கூட்டம் இருக்கிறது. இங்கே மனிதர்களின் கூட்டம் இருக்கிறது. ஆக இந்த கூட்டம் கூட ஒரு நாள் ஓட வேண்டும். பாபா வந்து ஆத்மாக்கள் அனைத்தையும் அழைத்துச் செல்கின்றார். சிவனின் ஊர்வலம் என்று சொல்லப்படுகிறது அல்லவா. குழந்தைகள் என்றும் சொல்லலாம் அல்லது காதலிகள் என்றும் சொல்லலாம். பாபா வந்து குழந்û தகளுக்கு ஞானம் கற்பித்து நினைவு யாத்திரையை கற்றுக் கொடுக்கின்றார். தூய்மையாக ஆகாமல் ஆத்மா செல்ல முடியாது. தூய்மையாகிவிட்டது என்றால் முதன்முதலில் சாந்திதாமம் செல்லும். அனைத்து ஆத்மாக்களும் அங்குச் சென்று இருக்கின்றன. அங்கிருந்து மெது-மெதுவாக வந்துக் கொண்டே இருக்கின்றன, வளர்ச்சி அடைந்துக் கொண்டே இருக்கிறது. நீங்கள் தான் முதல்-முதலில் பாபாவிற்கு பின்னால் ஓடுவீர்கள். உங்களுக்கு பாபாவோடு அல்லது காதலிகளுக்கு காதலனோடு தொடர்பு இருக்கிறது. இராஜ்யம் உருவாகிறது அல்லவா. அனைவரும் ஒன்றாக வருவதில்லை. அங்கே ஆத்மாக்கள் அனைத்தினுடைய உலகம் இருக்கிறது. அங்கிருந்து வரிசைக்கிரமமாக வருகின்றன. மரம் கொஞ்சம்- கொஞ்சமாக வளர்கிறது. முதல்-முதலில் ஆதிசனாதன தேவி-தேவதா தர்மம், இதை பாபா ஸ்தாபனை செய்கின்றார். முதன்முதலில் நம்மை பிராமணர்களாக ஆக்குகின்றார். பிரஜாபிதா பிரம்மா இருக்கிறார் அல்லவா. பிரஜைகளில் சகோதர-சகோதரிகளாகி விடுகிறார்கள். பிரம்மாகுமார குமாரிகள் அதிகம் இருக்கிறார்கள். கண்டிப்பாக நிச்சயப்புத்தியுடையவர்களாக இருப்பார்கள் ஆகையினால் தான் இவ்வளவு அதிகமானோர் ஆகியுள்ளார்கள். பிராமணர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்? அரைகுறையா அல்லது முழுமையானவர்களா? சிலர் 99 மதிப்பெண்கள் எடுக்கிறார்கள், சிலர் 10 மதிப்பெண்கள் எடுக்கிறார்கள் என்றால் அரைகுறை தான் அல்லவா. உங்களில் கூட யார் முழுமையானவர்களோ, அவர்கள் கண்டிப்பாக முதலில் வருவார்கள். அரைகுறையானவர்கள் கடைசியில் வருவார்கள். இது நடிகர்களின் உலகமாகும், இது சுற்றிக் கொண்டே இருக்கிறது. சத்யுகம், திரேதா.......... இது புருஷோத்தம சங்கமயுகமாகும். இதை இப்போது பாபா கூறியுள்ளார். முதலில் கல்பத்தின் ஆயுள் இலட்சக்கணக்கான ஆண்டுகள் என்று நாம் தவறாகவே புரிந்து வந்தோம். இது முழுமையாக 5 ஆயிரம் ஆண்டுகளின் சக்கரம் என்று பாபா கூறியுள்ளார். அரைக்கல்பம் இராம இராஜ்யம், அரைக்கல்பம் இராவண இராஜ்யமாகும். கல்பம் இலட்சக்கணக்கான ஆண்டுகளாக இருந்தால் பாதி-பாதியாக கூட இருக்க முடியாது. இந்த உலகம் துக்கம் மற்றும் சுகத்தினுடையதாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த எல்லையற்ற ஞானம் எல்லையற்ற தந்தையிடமிருந்து கிடைக்கிறது. சிவபாபாவிற்கு சரீரத்தின் பெயர் எதுவும் இல்லை. இந்த சரீரம் இந்த தாதாவினுடையதாகும். பாபா எங்கே இருக்கிறார்? பாபா கொஞ்ச காலத்திற்காக கடனாக பெற்றிருக்கிறார். எனக்கு பேசுவதற்கு வாய் வேண்டும் அல்லவா, என்று பாபா கேட்கின்றார். இங்கேயும் கூட கவ் முக் (பசுவின் முகம் போல) உருவாக்கப்பட்டுள்ளது. மலையிலிருந்து தண்ணீர் ஆங்காங்கே வருகிறது. இங்கே பசுவின் வாயை உருவாக்கிவிட்டார்கள், அதிலிருந்து தண்ணீர் வருகிறது, அதை கங்கை நீர்

என்று புரிந்துக் கொள்கிறார்கள். கங்கை எங்கிருந்து வந்தது? இவையனைத்தும் பொய்யாகும். பொய்யான சரீரம், மாயை பொய்யானது, உலகம் முழுவதும் பொய்யானதாகும். பாரதம் சொர்க்கமாக இருந்தபோது உண்மையான கண்டம் என்றழைக்கப்பட்டது, பிறகு பாரதம் பழையதாக ஆகிறது எனும்போது பொய்யான கண்டம் என்று சொல்லப்படுகிறது. இந்த பொய்யான கண்டத்தில் அனைவரும் தூய்மையற்றவர்களாக ஆகிவிடும்போது தான், பாபா எங்களை தூய்மையாக்கி இந்த பழைய உலகத்திலிருந்து அழைத்துச் செல்லுங்கள் என்று அழைக்கிறார்கள். என்னுடைய குழந்தைகள் அனைவரும் காமசிதையில் அமர்ந்து கருப்பாகிவிட்டார்கள் என்று பாபா கூறுகின்றார். பாபா அமர்ந்து குழந்தைகளுக்கு கூறுகின்றார், நீங்கள் சொர்க்கத்திற்கு எஜமானர்களாக இருந்தீர்கள் அல்லவா. நினைவு வருகிறது அல்லவா. குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார், முழு உலகத்திற்கும் புரிய வைக்க வில்லை. நம்முடைய தந்தை யார் என்பது தெரியட்டும் என்று உங்களுக்குத் தான் புரிய வைக்கின்றார்.

இந்த உலகத்தை முட்கள் நிறைந்த காடு என்று சொல்லப்படுகிறது. அனைத்திலும் பெரியது காமம் எனும் முள்ளால் குத்துகிறார்கள். இங்கே பக்தர்களும் அதிகமானோர் இருக்கிறார்கள், வெஜிட்டேரியனாக (சைவம்) இருக்கிறார்கள், ஆனால் விகாரத்தில் செல்வதில்லை என்பது கிடையாது. பால பிரம்மச்சாரிகளாகவும் நிறைய பேர் இருக்கிறார்கள். சிறுவயதிலிருந்தே மோசமான உணவு போன்றவைகளை சாப்பிடுவதில்லை. சன்னியாசிகள் கூட நிர்விகாரிகளாக ஆகுங்கள் என்று சொல்கிறார்கள். அந்த எல்லைக்குட்பட்ட சன்னியாசத்தை மனிதர்கள் செய்ய வைக்கிறார்கள். அடுத்தப் பிறவி சென்று குடும்பத்திலுள்ளவர்களிடம் பிறக்கிறார்கள். சத்யுகத்தில் இந்த கிருஷ்ணர் போன்ற தேவதைகள் வீடு-வாசலை விடுகிறார்களா என்ன? இல்லை. எனவே அவர்களுடையது எல்லைக்குட்பட்ட சன்னியாசமாகும். இப்போது உங்களுடையது எல்லையற்ற சன்னியாசமாகும். முழு உலகம், உறவுகள் போன்றவற்றையும் சன்னியாசம் செய்கிறீர்கள். உங்களுக்காக இப்போது சொர்க்கம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. உங்களுடைய புத்தி சொர்க்கத்தின் பக்கம் தான் செல்லும். எனவே சிவபாபாவையே நினைவு செய்ய வேண்டும். எல்லையற்ற தந்தை கூறுகின்றார், என்னை நினைவு செய்யுங்கள். மன்மனாபவ, மத்தியாஜிபவ. அப்போது நீங்கள் தேவதைகளாக ஆகிவிடுவீர்கள். இது அதே கீதையின் கதையாகும். சங்கமயுகமாகவும் இருக்கிறது. நான் சங்கமயுகத்தில் தான் கீதை சொல்கின்றேன். கண்டிப்பாக இராஜயோகத்தை முற்பிறவியில் சங்கமயுகத்தில் தான் கற்றிருப்பீர்கள். இந்த உலகம் மாறுகிறது அல்லவா, நீங்கள் தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாக ஆகிவிடுகிறீர்கள். இப்போது இது புருஷோத்தம சங்கமயுகமாகும், இப்போது நாம் தமோபிரதானத்திலிருந்து சதோபிரதானமாக ஆகின்றோம். ஒவ்வொரு விஷயத்தையும் நல்ல விதத்தில் புரிந்துக் கொண்டு நம்பிக்கை கொள்ள வேண்டும். இதை மனிதர்கள் யாராவது சொல்கிறார்களா என்ன. இது ஸ்ரீமத் அதாவது உயர்ந்ததிலும் உயர்ந்த பகவானுடைய வழியாகும். மற்றவை அனைத்தும் மனிதர்களுடைய வழியாகும். மனிதர்களுடைய வழிப்படி இறங்கி வந்துள்ளீர்கள். இப்போது ஸ்ரீமத்தின் மூலம் உயருகிறீர்கள். பாபா மனிதனிலிருந்து தேவதைகளாக்கிவிடுகின்றார். சொர்க்கவாசிகளுடையது தெய்வீக வழியாகும் மற்றும் அது நரகவாசி மனிதர்களுடைய வழியாகும்., அதை இராவண வழி என்று சொல்லப்படுகிறது. இராவண இராஜ்யமும் ஒன்றும்

குறைந்தது அல்ல. முழு உலகத்திலும் இராவண இராஜ்யம் நடக்கிறது. இது எல்லையற்ற இலங்கையாகும், இதில் இராவணனுடைய இராஜ்யம் நடக்கிறது பிறகு தேவதைகளுடைய தூய்மையான இராஜ்யம் நடக்கும். அங்கே அதிக சுகம் இருக்கிறது. சொர்க்கத்திற்கு எவ்வளவு மகிமை இருக்கிறது. சொர்க்கத்தை அடைந்தார் என்றும் சொல்கிறார்கள். அப்படியென்றால் நரகத்தில் இருந்தார் அல்லவா. நரகத்திலிருந்து சென்றார் என்றால் கண்டிப்பாக நரகத்தில் தான் வருவார் அல்லவா. சொர்க்கம் இப்போது எங்கே இருக்கிறது? இந்த விஷயங்கள் எந்த சாஸ்திரத்திலும் இல்லை. இப்போது பாபா உங்களுக்கு ஞானம் முழுவதையும் கொடுக்கின்றார். பேட்டரி நிரம்புகிறது. மாயை தொடர்பை துண்டித்துவிடுகிறது. நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினை வுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. உலகிற்கு அதிபதி ஆவதற்கு அல்லது உலக அரசாட்சி பெற வேண்டும் என்றால் முக்கியமாக காம விகாரத்தின் மீது வெற்றி அடைய வேண்டும். சம்பூர்ண விகாரமற்றவர்களாக அவசியம் ஆக வேண்டும்.

2. எப்படி நமக்கு தந்தை கிடைத்துள்ளாரோ அதே போல அனைவரையும் தந்தையை சந்திக்குமாறு செய்யும் முயற்சி செய்ய வேண்டும். தந்தையின் சரியான அறிமுகத்தை கொடுக்க வேண்டும். உண்மையிலும் உண்மையான யாத்திரையை கற்பிக்க வேண்டும்,

1. தன் மீது மிகுந்த கட்டுப்பாடு வைக்க வேண்டும். ஸ்ரீமத்தில் ஒருபோதும் அலட்சியமாக இருந்துவிடக் கூடாது. மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒருபோதும் எந்த ஒரு விதிமுறைக்குப் புறம்பான காரியமும் செய்யக் கூடாது.

2. உள்முகநோக்கில் இருந்து ஒரு பாபாவிடம் புத்தியின் தொடர்பை இணைக்க வேண்டும். இந்தத் தூய்மையற்ற பழைய உலகத்திடம் எல்லையற்ற வைராக்கியம் வைக்க வேண்டும். புத்தியில் இருக்க வேண்டும் - எந்த மாதிரிக் கர்மத்தை நான் செய்கிறேனோ, என்னைப் பார்த்து மற்றவர்களும் செய்வார்கள்.

1. மலர்த்தோட்டத்திற்குச் செல்ல வேண்டும், ஆகையால் மணம் வீசும் மலர்களாக வேண்டும். யாருக்கும் துக்கம் கொடுக்கக் கூடாது. ஒரு பரலௌகிக தந்தையுடன் அனைத்து சம்மந்தங்களையும் இணைக்க வேண்டும்.

2. சிவபாபா அன்பிலும் அன்பானவர், அந்த ஒருவர் மீது தான் அன்பு செலுத்த வேண்டும். சுகத்தை வழங்கும் வள்ளல் தந்தையை நினைவு செய்ய வேண்டும்.

1. சுகதாமம் செல்வதற்காக சுகம் மிக்கவராக ஆக வேண்டும். அனைவரின் துக்கத்தையும் நீக்கி சுகம் கொடுக்க வேண்டும். ஒருபோதும் துக்கம் மிக்கவராக

ஆகக் கூடாது.

2. இந்த அழியக்கூடிய உடலில் ஆத்மாதான் மிகவும் மதிப்பு மிக்கதாகும், அதுவே அமரன், அழிவற்றது ஆகும், ஆகையால் அழிவற்ற பொருள் மீது அன்பு வைக்க வேண்டும். தேக உணர்வை நீக்க வேண்டும்.

1. எதுவரை வாழ்வீர்களோ அதுவரை ஞான அமிர்தம் பருகிக் கொண்டே இருக்க வேண்டும். தனது பையில் (புத்தியில்) ஞான இரத்தினங்களை நிறைத்துக் கொள்ள வேண்டும். சந்தேகத்தில் வந்து எந்த கேள்வியும் எழுப்பக் கூடாது.

2. யோக அக்னியின் மூலம் ஆத்மா என்ற சீதையை தூய்மை ஆக்க வேண்டும். எந்த விஷயத்திலும் விரிவாகச் செல்லாமல் ஆத்ம அபிமானி ஆவதற்கான முயற்சி செய்ய வேண்டும். சாந்திதாமம் மற்றும் சுகதாமத்தை நினைவு செய்ய வேண்டும்.

1) மனம்-சொல்-செயலில் தூய்மையாக ஆகி ஆத்மா எனும் பேட்டரியை சார்ஜ் செய்ய வேண்டும். முழுமையான பிராமணர்களாக ஆக வேண்டும்.

2) மனதின் வழி அல்லது மனிதர்களின் வழியை விட்டு விட்டு ஒரு பாபாவின் ஸ்ரீமத்படி நடந்து தங்களை உயர்ந்தவர்களாக்க வேண்டும். சதோபிரதானமாக ஆகி பாபாவோடு பறந்து செல்ல வேண்டும்.

வரதானம் : துக்கமான உலகம் அருகில் இருந்தாலும் கூட கவலையற்ற உலகின் இராஜ்யத்தை அனுபவம் செய்யக்கூடிய அஷ்ட சக்திகளின் சொரூபம் ஆகுக.

துக்கம் மற்றும் துக்கமற்ற (சுகத்தின்) ஞானம் இப்பொழுது இருக்கிறது. துக்கமான உலகம் முன்னால் இருந்தாலும், கூட சதா கவலையற்ற இராஜ்யத்தின் அனுபவத்தை செய்வது - இது தான் அஷ்ட சக்திகளின் சொரூபம். கர்மேந்திரியங்களை வென்ற குழந்தைகளின் அடையாளம். இப்பொழுது தான் பாபாவின் மூலம் சர்வசக்திகளின் பிராப்தி ஏற்படுகிறது, ஆனால் ஒருவேளை சகவாச தோஷத்தினால் அல்லது கர்மேந்திரியங்களுக்கு வசப்பட்டு தனது சக்தியை இழந்து விட்டால், கவலையற்ற இராஜ்யத்தினால் அடைந்த நஷா மற்றும் குஷி தானாகாவே இழந்துவிடுவோம். கவலையற்ற இராஜயமும் பரம ஏழ்மை நிலை அடைந்துவிடும்.

ஞானத்தின் பாயிண்டை ஒவ்வொரு நாளும் ரிவைஸ் செய்து சமாதான சொரூபம் ஆகக்கூடிய கவலையற்ற உலகின் கவலையற்றவர் ஆகுக.

ஞானத்தின் பாயிண்ட் டைரியில் மற்றும் புத்தியில் என்ன இருக்கிறதோ, அதை தினந்தோறும் ரிவைஸ் செய்யுங்கள். மேலும் அதை அனுபவத்தில் கொண்டு வாருங்கள். எனவே எந்தவிதமான பிரச்சனைகளாக இருந்தாலும், எளிதாகவே சமாதானம் செய்ய முடியும். ஒருபொழுதும் வீணான எண்ணங்களின் சுத்தியினால் பிரச்சனைகள் என்ற கற்களை உடைப்பதில் நேரத்தை வீணாக்காதீர்கள், டிராமா என்ற வார்த்தையின் நினைவு மூலம் (ஹை ஜம்ப்) உயர தாண்டி முன்னேறி செல்லுங்கள். அதன் பிறகு இந்த

பழைய சம்ஸ்காரம் உங்களுக்கு பணிவிடை செய்யும். ஆனால் முதலில் கவலையற்றவர் ஆகுங்கள். சிம்மாசனதாரி ஆகுங்கள்.

எவருடைய குறையையும் பலவீனத்தையும் பார்க்காமல், தன்னுடைய குவ்ங்கள் மற்றும் சக்திகளின் சகயோகம் கொடுக்கக் கூடிய மாஸ்டர் வள்ளல் ஆகுக.

யார் சதா இதே ஆன்மிக பாவனையில் இருக்கிறார்களோ -- அதாவது ஆத்மாக்கள் அனைவரும் தனக்கு சமமாக ஆஸ்திக்கு அதிகாரி ஆகிவிட வேண்டும், யாருடைய குறைகளையும் பலவீனத்தையும் பார்க்காமல், தாங்கள் தாரணை செய்துள்ள குணங்களின், சக்திகளின் சகயோகம் கொடுக்கிறார்களோ, அவர்கள் தாம் மாஸ்டர் வள்ளல் ஆவார்கள். இவர் இப்படித் தான் இருக்கிறார் -- இந்த பாவனைக்கு பதிலாக நான் இவரை பாப்-சமான் ஆக்குவேன் -- இந்த சுப பாவனை இருக்க வேண்டும். அதோடு கூடவே இந்த சிரேஷ்ட விருப்பம் இருக்க வேண்டும் -- இந்த சர்வ ஆத்மாக்களும் ஏழ்மை, துக்கம், அசாந்தியில் இருந்து விடுபட்டு, சதா சாந்தம் நிறைந்த, சுகசொரூப செல்வந்தர் ஆகிவிட வேண்டும். அப்போது மாஸ்டர் வள்ளல் எனச் சொல்வார்கள்.

தன்னுடைய அநாதி, ஆதி சுவரூபத்தின் (அநாதி -ஜோதி சொரூபம் மற்றும்
ஆதி -தேவதா சொரூபம்) நினைவு மூலமாக பந்தனமற்றவராக ஆகி மற்றவர்களையும் ஆக்கக்கூடிய மர்ஜீவா (உயிருடன் இருக்கும்போதே இறந்தவர்) ஆகுக.

எப்படி தந்தை இரவல்(லோன்) வாங்குகிறார், பந்தனத்தில் வருவதில்லையோ, அப்படி நீங்கள் மர்ஜீவா குழந்தைகளும் - சரீரம், சன்ஸ்காரங்கள் மற்றும் சுபாவத்தினடைய பந்தனத்திலிருந்து விடுதலை பெறுங்கள். எப்பொழுது வேண்டுமோ, எப்படி வேண்டுமோ அப்படி சன்ஸ்காரத்தை தன்னுடையதாக ஆக்கி கொள்ளுங்கள். எப்படி தந்தை பந்தனமற்றவராக இருக்கின்றாரோ அப்படி பந்தனமற்றவராக ஆகுங்கள். மூலவதனத்தினுடைய ஸ்திதியில் (மனோநிலையில்) நிலைத்து இருந்து பிறகு கீழே வாருங்கள். தன்னுடைய அநாதி, ஆதி சுவரூபத்தை நினைவில் வையுங்கள். அவதாரம் எடுத்துள்ள ஆத்மா என புரிந்து காரியம் செய்யுங்கள், அப்பொழுது மற்றவர்களும் உங்களை பின்பற்றுவார்கள்.

சிந்தனையின் மூலம் மூழ்கிய நிலை என்ற கட-ல் சதா கலந்திருக்கும் அனுபவம் செய்யக் கூடிய அனுபவி மூர்த்தி ஆகுக.

அனுபவங்களை அதிகரிப்பதற்கு ஆதாரம் சிந்தனை சக்தியாகும். சிந்தனை செய்பவர்கள் இயற்கையாகவே கலந்திருப்பார்கள். கலந்திருக்கும் நிலையில் யோகா செய்ய வேண்டியிருக்காது, ஆனால் நிரந்தரமாக இருக்கும், கடின உழைப்பு செய்ய வேண்டியிருக்காது. கலந்திருப்பது என்றால் அன்பு என்ற கட-ல் கலந்திருப்பதாகும். இவ்வாறு கலந்திருப்பவர்களை யாரும் பிரிக்க முடியாது. எனவே கடின உழைப்பி-ருந்து விடுபடுங்கள், கட-ன் குழந்தைகளாக இருப்பதால் அனுபவங்கள் குளத்தில் செல்லாதீர்கள். ஆனால் கட-ல் கலந்து விடுங்கள். அப்பொழுது தான் அனுபவி மூர்த்தி என்று கூற முடியும்.

சத்தியத்தின் சக்தி மூலம் இயற்கை மற்றும் உலகத்தை

சதோபிரதானம் ஆக்கக்கூடிய மாஸ்டர் விதி-விதாதா ஆகுக.
எப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் சத்தியத்தின் சக்தியை தாரணை செய்து மாஸ்டர் விதி-விதாதா (விதியை உருவாக்குபவர்) ஆகின்றீர்களோ, அப்பொழுது இயற்கை சதோபிரதானம் ஆகிவிடுகிறது, யுகம் சதயுகம் ஆகிவிடுகிறது. அனைத்து ஆத்மாக்களும் சத்கதியின் அதிர்ஷ்டத்தை உருவாக்கிவிடுகின்றார்கள். உங்களுடைய சத்தியத்தன்மை தங்கத்திற்கு (பாரஸ்) சமமானதாகும். எவ்வாறு தங்கமானது இரும்பை தங்கமாக மாற்றிவிடுகின்றதோ, அதுபோன்று சத்தியத்தின் சக்தி ஆத்மாவை, இயற்கையை, சமயத்தை, அனைத்து பொருட் களை, அனைத்து சம்பந்தங்களை, சமஸ்காரங்களை, உணவுப் பழக்கத்தை சதோபிரதானம் ஆக்கிவிடுகின்றது.

சுலோகன்: யாரை இயற்கையின் கொந்தளிப்பு கூட கவர்ச்சி செய்யாதோ,

அவ்யக்த இ^ôரே: இந்த அவ்யக்த மாதத்தில் பந்தனத்தி-ருந்து விடுபட்டு

ஜீவன்முக்தி ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்

தனது எண்ணங்களின் புயல் அல்லது ஏதாவது சம்மந்தங்களின் மூலம், இயற்கை அல்லது சூழ்நிலைகளின் மூலம் புயல் அல்லது தடைகள் வருகிறது என்றால், அதிலிருந்து விடுபடுவதற்காக, யோகயுக்த் (யோகம் நிறைந்தவர்), யுக்த் யுக்த் (ஞானம் நிறைந்தவர்) ஆகுக, எதுவரை யோகயுக்த் ஆகவில்லையோ, அதுவரை தடைகளோடு போராட வேண்டிருக்கும்.

27.01.2026 காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா, மதுபன்

இனிமையான குழந்தைகளே! ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத் படி நடந்து செல்லுங்கள். இல்லையெனில் மாயா ஒன்றுமில்லாத ஏழையாக ஆக்கிவிடும். இந்தக் கண்கள் மிகவும் ஏமாற்றம் தருகின்றன. இவற்றிடம் மிக எச்சரிக்கையாக இருங்கள்.

கேள்வி: எந்தக் குழந்தைகளை மாயா அதிக விகர்மங்கள் செய்ய வைக்கிறது? யக்ஞத்தில் விக்ன ரூபமாக இருப்பவர் யார்?

பதில்: யாருக்கு தன்னைப் பற்றிய அகங்காரம் உள்ளதோ, மாயா அவர்களை அதிக விகர்மங்கள் செய்ய வைக்கிறது. அப்படிப்பட்ட போலி அகங்காரம் உள்ளவர்கள் முரளியும் கூடப்படிக்கமாட்டார்கள். அதுபோல் அலட்சியமாக இருப்பதால் மாயா அடி கொடுத்து ஒன்றுக்கும் உதவாதவர்களாக ஆக்கிவிடுகின்றது. யாருடைய புத்தியில் பரசிந்தனையின் விஷயங்கள் உள்ளனவோ, அவர்கள் விக்ன ரூபம் ஆகின்றனர். இது மிகக் கெட்ட பழக்கமாகும்.

அவ்யக்த இ^ôரே: இந்த அவ்யக்த மாதத்தில் பந்தனத்தி-ருந்து விடுபட்டு

ஜீவன்முக்தி ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்

ஜீவன் பந்தனத்தின் கூடவே ஜீவன் முக்தியை அனுபவம் செய்ய வேண்டும். அங்கோ ஜீவன் பந்தனத்தின் விஷயம் என்பதே கிடையாது. அங்கு (சத்யுகம்) அந்த பிராலப்தின் அனுபவத்தில் இருப்போம். முக்தி தாமத்தின் அனுபவத்தை இங்கு அனுபவம் செய்ய முடியும், அங்கு முக்தி தாமத்தில் அனுபவம் செய்ய முடியாது. ஆகையால் சங்மயுகத்தில் முக்தி ஜீவன்முக்தியின் அனுபவம் செய்யுங்கள். ஆஸ்திக்கு அதிகாரி ஆகிவிட்டீர்கள், இப்பொழுது அதை தாரணை செய்து முழு இலாபத்தை பெறுங்கள்.

28.01.2026, காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா, மதுபன்

இனிமையான குழந்தைகளே! குழந்தைகளாகிய உங்களை உலகின் எஜமானாக ஆக்குவதற்காக மிகவும் அன்பான சிவபாபா வந்துள்ளார், நீங்கள் அவரின் வழிப்படி (ஸ்ரீமத்) நடந்து செல்லுங்கள்.

கேள்வி: மனிதர்கள் பரமாத்மாவைக் குறித்து ஒன்றுக்கொன்று முரணான எந்த இரு விஷயங்களை சொல்கின்றனர்?

பதில்: ஒரு தரப்பினர் சொல்கின்றனர் - பரமாத்மா அகண்ட ஜோதியாக உள்ளார். மற்றொரு தரப்பினர் சொல்கின்றனர் - அவர் பெயர் உருவத்திற்கும் அப்பாற்பட்டவர். இந்த இரண்டு விஷயங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ளது. சரியான ரூபத்தை தெரிந்து கொள்ளாத காரணத்தினால் பதிதராக (தூய்மையற்றவர்களாக) ஆகிக் கொண்டே செல்கின்றனர். தந்தை வரும்போது தனது சரியான அறிமுகத்தைக் கொடுக்கிறார்.

பாடல்: இறந்தாலும் உங்கள் மடியில். . . .

அவ்யக்த இ^ôரே: இந்த அவ்யக்த மாதத்தில் பந்தனத்தி-ருந்து விடுபட்டு

ஜீவன்முக்தி ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்

முதலில் தனது தேகத்திலிருந்து, தேக சம்பந்தத்திலிருந்து மற்றும் பழைய உலகின் ஸ்மிருதியிலிருந்து விடுபட்டவர் ஆகுங்கள். எப்போது இந்த முக்தியின் அவஸ்தாவை அனுபவம் செய்வீர்களோ, அப்போது விடுதலை பெற்ற பின் ஜீவன்முக்தியின் அனுபவம் தானாகவே ஆகிவிடும். எனவே சோதித்துப் பாருங்கள் -- உயிர் வாழ்க்கையில் இருந்து கொண்டே தேகத்தின் சம்பந்தம் மற்றும் பழைய உலகத்தின் கவர்ச்சியிலிருந்து எது வரை விடுபட்டிருக்கிறோம்?

.

29.01.2026 காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா, மதுபன்

இனிமையான குழந்தைகளே! தனது இனிமையான தந்தையை நினைவு செய்தீர்கள் என்றால் நீங்கள் சதோபிரதான தேவதையாக ஆகிவிடுவீர்கள்,

நினைவின் யாத்திரையில்தான் அனைத்து ஆதாரமும் உள்ளது.

கேள்வி: தந்தையின் மீது குழந்தைகளுக்கு ஈர்ப்பு ஏற்படுவது போல எந்த குழந்தைகளின் மீது அனைவருக்கும் ஈர்ப்பு ஏற்படும்?

பதில்: மலர்களாக ஆகியுள்ளவர்கள் மீது. சிறு குழந்தைகள் மலர் போல உள்ளதால் அவர்களுக்கு விகாரங்களைப் பற்றி தெரிவதே இல்லை. எனவே அவர்கள் அனைவரையும் ஈர்க்கின்றனர் அல்லவா. அதுபோல குழந்தைகளாகிய நீங்களும் கூட மலர்களாகும்போது அதாவது தூய்மையடைந்து விடும்போது அனைவருக்கும் ஈர்ப்பு ஏற்படும். உங்களுக்குள் விகாரங்களின் எந்த முள்ளும் இருக்கக் கூடாது.

அவ்யக்த இˆôரே: இந்த அவ்யக்த மாதத்தில் பந்தனத்தி-ருந்து விடுபட்டு

ஜீவன்முக்தி ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்

எதுவரை, எந்தவிதமான பற்றும் இருக்கின்றதோ - அது எண்ணத்தின் ரூபத்தில் இருக்கலாம், சம்மந்தத்தின் ரூபத்தில் இருக்கலாம், தொடர்பின் ரூபத்தில் இருக்கலாம், தன்னுடைய விசேஷதாவின் பக்கம் இருக்கலாம்; எந்த ஒரு பற்றும் பந்தனம்-நிறைந்தவராக ஆக்கிவிடும். அந்த பற்று அசரீரியாக ஆக விடாது மேலும் விஷ்வ கல்யாண்காரியாகவும் ஆக - விட முடியாது ஏனெனில் முதலில் தான், பற்றிலிருந்து விடுபட்டவராக ஆக வேண்டும் அப்போதே விஷ்வத்திற்க முக்தி மற்றும் ஜீவன்முக்திக்கான ஆஸ்தியை கொடுக்க முடியும்.

30.01.2026 காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா, மதுபன்

இனிமையான குழந்தைகளே! முழு கல்பத்தில் இது மிகவும் உத்தமமான கல்யாணகாரி சங்கமயுகமாகும், இதில் குழந்தைகளாகிய நீங்கள் நினைவு என்ற சாக்ரீன் (இனிப்பு) மூலம் சதோபிரதானமாக ஆகிறீர்கள்.

கேள்வி: பலவிதமான கேள்வி எழுவதற்கான காரணம் மற்றும் அவை அனைத்திற்கும் நிவாரணம் என்ன?

பதில்: எப்பொழுது தேக அபிமானத்தில் வருகிறீர்களோ அப்பொழுது சந்தேகம் ஏற்படுகிறது, சந்தேகம் வந்ததும் பல விதமான கேள்விகள் உருவாகிவிடுகிறது. பாபா கூறுகின்றார் - அசுத்தத்தி-ருந்து தூய்மை (சுத்தமாக) ஆக வேண்டும் மற்றும் ஆக்க வேண்டும் என்ற தொழிலை குழந்தைகளாகிய உங்களுக்கு நான் கொடுத்திருக்கிறேன், இந்த தொழி-ல் ஈடுபட்டிருக்கும்பொழுது அனைத்து கேள்விகளும் நீங்கிவிடும்.

பாடல்: உன்னை அடைந்ததால் உலகையே அடைந்து விட்டேன் .......

அவ்யக்த இˆôரே: இந்த அவ்யக்த மாதத்தில் பந்தனத்தி-ருந்து விடுபட்டு

ஜீவன்முக்தி ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்

ஒருவேளை ஏதாவது சுபாவம், சன்ஸ்காரம், மனிதன் அல்லது பொருட்களின் பந்தனம் தன் பக்கம் ஈர்க்கிறது எனில் தந்தையின் நினைவு என்ற ஈர்ப்பு சதா இருக்க முடியாது. கர்மாதீத நிலை அடைவது என்றால் அனைத்து கர்மபந்தனங்களி-ருந்து முக்தியாவது, விடுபட்டவராகி, இயற்கையின் (சரீரத்தின்) மூலம் நிமித்தமாகி செயல் செய்விப்பதாகும். இந்த விடுபட்டு இருப்பதற்கான பயிற்சி அடிக்கடி செய்து கொண்டே இருங்கள். எளிதாக மற்றும் இயற்கையாகவே இந்த அனுபவம் ஏற்பட வேண்டும் செய்விப்பவர் மற்றும் செய்யக் கூடிய இந்த கர்மேந்திரியங்கள் தனித்தனியானது

31.01.2026 காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா, மதுபன்

இனிமையான குழந்தைகளே! நீங்கள் இங்கே சர்வசக்திமான் தந்தையிடமிருந்து சக்தி அடைவதற்காக அதாவது தீபத்தில் ஞானம் எனும் நெய் ஊற்றிக் கொள்வதற்காக வந்துள்ளீர்கள்

கேள்வி: சிவனுடைய ஊர்வலம் ஏன் பாடப்பட்டுள்ளது?

பதில்: ஏனென்றால் சிவபாபா திரும்பி செல்லும்போது அனைத்து ஆத்மாக்களின் கூட்டமும் அவருக்கு பின்னால் ஓடிச் செல்கின்றன. மூலவதனத்தில் கூட ஆத்மாக்களின் கூட்டம் சேர்ந்து (தங்கி) விடுகிறது. தூய்மையாக ஆகக் கூடிய குழந்தைகளாகிய நீங்கள் பாபாவோடு செல்கிறீர்கள். சிவன் கூடவே செல்வதின் காரணத்தினால் தான் ஊர்வலம் என்று சொல்லப்படுகிறது.

அவர்களே யோகி ஆத்மாக்கள் ஆவார்கள்.

அவ்யக்த இ^ôரே: இந்த அவ்யக்த மாதத்தில் பந்தனத்தி-ருந்து விடுபட்டு

ஜீவன்முக்தி ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்

சுயதரிசன சக்கரதாரியில் இருந்து குடைநிழலின் கீழ் இருப்பவர்களாக (சத்ரதாரி) ஆகுங்கள். தேகத்தினுடைய நினைவின் அனேக வீணான சங்கல்பங்களின் சக்கரத்தில் இருந்து, லௌகீகம் மற்றும் அலௌகீக சம்பந்தங்களின் சக்கரத்தில் இருந்து, தன்னுடைய அனேக பிறவிகளின் சுபாவம் மற்றும் சமஸ்காரங்களின் சக்கரத்தில் இருந்து மற்றும் இயற்கையின் அனேக விதமான கவர்ச்சிகளின் சக்கரத்தில் இருந்து எப்பொழுது முக்தி அடைவீர்களோ, அப்பொழுது மற்ற ஆத்மாக்களையும் கூட தந்தையிடம் இருந்து கிடைத்திருக்கக் கூடிய சக்திகளின் மூலம் அனேக சக்கரங்களில் இருந்து சகஜமாகவே விடுவித்து ஜீவன்முக்தி அடைந்தவர்களாக ஆக்கமுடியும்.